313

313



15 JUN 1946
MADRAS

ஸ்ரீ:

# கோதை-போலும்

(ஸ்ரீதேசிகன் ஸ்ரீஸூக்திகளில் இரண்டு இடங்களிலுள்ள அர்த்தவிசேஷத்தை விளக்கிக்காட்டுவது)

## வைதிகபத ஸேவை

என்கிற

(வேதத்திலுள்ள ஒரு பதத்தின் விமர்சரூபமான)

அனுபந்தத்துடன் கூடியது.

திருவரங்கம் திருமலைதாதாசாரியர்

எழுதியது.

ஸ்ரீநிவாஸ ப்ரஸ், திருவையாறு.

1946 [0—8—0

O22u:417x1,13
N46

112997

ஸ்ரீதேசிகவந்தநமாலிகை 1

॥ ஸ்ரீ: ॥

15 JUN 1946
MADRAS

# கோதை - போலும்

திருவரங்கம் திருமலைதாதாசாரியர்

ஸ்ரீநிவாஸ பிரஸ், திருவையாறு.

பார்த்திவ-பங்குனி ] [ விலை ரூ. 0-8-0

1946

First Edition.
Copies. 500

112997

Printed & Published by
S. VIJAYARAGHAVAN
SRINIVASA PRESS, TIRUVADI.

N46

# விஷய விளக்கம்

வம்பவிழ் கோதை பொருட்டா
மால்விடையேழு மடர்த்த
செம்பவ ளத்திரள் வாயன்
சிரீதரன் தொல்புகழ் பாடி
கும்பிடு நட்டமிட் டாடிக்
கோகுகட் டுண்டுழ லாதார்
தம்பிறப் பால்பய னென்னே
சாதுச னங்களி டையே

(திருவாய்மொழி 3, 5, 4)

1. தமிழ் பாஷையில் கோதை என்னும் பதம் பெண் அதாவது ஸ்த்ரீ என்ற அர்த்தத்திலும் உண்டு.
2. இப்பாசுரத்தில் இப்பதம் இவ்வர்த்தத்தில் உபயோகிக்கப்பட்டிருக்கின்றதென்பதும் உசிதம்.
3. ஆண்டாளுக்குத் திருநாமமான கோதை என்றதை ஸம்ஸ்க்ருதத்தில் கோதா என்றார்கள். அது போலவே பொதுவாகப் பெண் என்று அர்த்தமுள்ளவிடத்திலும் என்னலாம்.
4. இதை எல்லாம் திருவுள்ளத்தில் வைத்து ஸ்ரீ தேசிகன் 'கோதாயை ரக்ஷாவஸேது' என்று த்ரமிடோபநிஷத் தாத்பர்யரத்நாவளியில் ஸாதித்திருக்கிறார்.

இவ்விஷயங்களை விசதமாக நிரூபிக்கின்றது முதல்பாகம்

---

தன்னடியார் திறத்தகத்துத் தாமரையா
ளாகிலும் சிதகு ரைக்குமேல்
என்னடியார் அதுசெய்யார் செய்தாரேல்
நன்றுசெய்தார் என்பர் போலும்

மன்னுடைய விபீடணற்கா மதிளிலங் கைத்
திசைநோக்கி மலர்க்கண் வைத்த
என்னுடைய திருவரங்கர்க் கன்றியுமற்
ெருருவர்க்கு ஆளாவரோ
(பெரியாழ்வார் திரு. 4. 9. 1.)

1. போலும் என்ற சொல் ஓரிடத்திலும் பொருள் குறிக்காமல் வராது.
2. இப்பாட்டிலும் அதற்கு அர்த்தமுண்டு.
3. அதனுல் நன்று செய்தார் என்றவிடத்தில் உண்மையில் அது நன்றன்று என்று கிடைக்கின்றது.
4. இக்கருத்துடன் ஸ்ரீதேசிகன் ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரத்தில் 'என்பர்போலும் என்று சொல்லுகையாலே இது வஸ்துவ்ருத்தியில் நன்றன்று என்றுமிடம் ஸூசிதம்' என்று ஸாதித்திருக்கிருர். இதை உபபாதிக்கின்றது இரண்டாம் பாகம்.

---

இப்போது இவ்விரண்டே விஷயங்களைச் சுருக்கமாக நிரூபித்திருக்கிறது. இன்னும் பலபல விஷயங்கள் நிரூபிக்கப் படவேண்டியவையாய் இருக்கின்றன.

ஸ்ரீ தேசிகன் ஸ்ரீ ஸூக்திகளில் ஒவ்வொன்றையும் எடுத்து விசதமாக தாத்பர்ய நிரூபணம்பண்ணி உலகமெல்லாம் மகிழும்படி செய்யவேண்டியது பகவத்ராமானுஜ ஸித்தாந்தாவலம்பிகளான எல்லாருடையவும் கடமையாகும். உதாரர்களான ஆஸ்திகர்களுடைய ஆதரவும் பகவத் ஸங்கல்பமுமிருந்தால் இக்கைங்கர்யத்தை சக்தியுள்ளவரையில் க்ரமமாக நடத்திவரவேண்டுமென்று எண்ணம்.

G. தெற்குமாடவீதி,
திருபதி.

திருமலைதாதம்

ஸ்ரீ:

# முகவுரை.

கோதை என்கிற தமிழ்ச்சொல் ஆண்டாளைத் தவிர்த்து மற்றுமோர் ஸ்த்ரீவ்யக்தியைக் குறிக்கமாட்டாது என்பதாக எழுந்துள்ளது வாதம். இதன் அநௌசித்யத்தை 'மாலையும் மாதரும் ... ... .... கோதையென்ப' என்கிற பிங்கள நிகண்டுவைக் காட்டி விளக்கியிருப்பதுவே போதுமான ஸமாதானமாகும். 'கோதா கோதாவரீ நத்யாம் கோதா யோஷிதி கத்யதே' என்று சப்தரத்ந ஸமந்வய கோசவசநத்தை ஸ்தோத்ர வ்யாக்யாதாக்களும் உதாஹரணம் செய்துள்ளார்கள். ஆகவே ஸ்த்ரீ ஸாமாந்ய வாசியான கோதாசப்தத்தை ப்ரகரணவசத்தினால் நப்பின்னை பரமாகக்கொண்டு ஆசார்யன் ப்ரயோகம் செய்ததாகக் கொள்வதில் யாதொரு அநுபபத்தியும் இல்லை.

'குத க்ரீடாயாமேவ' என்பதாக குத தாது க்ரீடை என்கிற அர்த்தத்தில் உள்ளது. இந்த தாதுவின் பேரில் கோதா என்கிற சப்தம் நிஷ்பந்நமாகிறது. விலாஸிநீ என்றுப்போலுள்ளது கோதா சப்தமும்.

கோதாவரீ என்கிற நதிக்கு கோதா என்கிற நாமமுண்டு என்பது ஸம்ப்ரதிபந்நம். அங்கு ரிஷிகள் சிலர் மாயையினால் கோவதம் செய்து கௌதமரிஷியை வஞ்சித்ததாக வராஹ புராணத்தில் சொல்லி இருப்பதால் அந்த நதிக்கு கோதா என்று நாமமாயிற்று என்று மத்வாசார்ய க்ரந்தத்தில் விளக்கமுள்ளது. பாசுபதாதிகரண ச்ருதப்ரகாசிகையிலும் இவ்விஷயம் காண்கிறது. ஆகவே 'தாப் லவநே, அதவா தோ அவகண்டநே' என்கிற தாதுவிலிருந்து

கோபய நிமித்தகமாக அந்த நதிக்கு அந்நாமம் ஏற்பட்டுள்ளது என்று கொண்டார்கள். 'நார'சப்த வாச்யமான அஜ்ஞானத்தைப் போக்குகின்றமையால், 'நாரதஃ' என்று நாமம் என்பதாக ஸ்ரீராமாயணத்தின் முதல் ச்லோகத்தில் கோவிந்தராஜீயம் காண்கிறது. ஸூக்தத்தில் நப்பின்னை பிராட்டியும் கோதாவரீ நதியைப்போலவே கோபயத்திற்கு நிமித்தமானமையைப்பற்றி கோதா என்கை உபபந்நமாகும். இவ்வர்த்தத்தில் 'கோதாயை ஸாக்ஷாவஸேது' என்று கோதாஶப்தம் ப்ரயோகித்திருப்பது ஸ்வாரஸ்யமானது. நீளாதி சப்தமானது விவக்ஷிதார்த்தத்தைக் காட்டமாட்டாது. இவ் விசேஷத்துடன் ப்ராஹ்ம்ருஸேஷஹேகேஷ...... கோக்ஷம் த்ராணகாயை. கோதாயை ஸாக்ஷாவஸேது என்பதாக ஸ்தநப்ராஸவிஶேஷமும் இங்கு அநுஸந்தேயம், இவற்றை எல்லாம் உட்கொண்டே—

'கோதா என்னும் பதத்தை எடுத்து ஆண்டது, இவ்விடத்தில் வேறொருவிதமான வ்யாக்யானமும் செய்யலாம்' என்று ஸூசனம் பண்ணுவதற்காக
என்பதாக இந்நூலாசிரியர் க்ரந்தாரம்பத்தில் எழுதியிருக்கின்றார்போலும்.

இனி 'தன்னடியார் திறத்தகத்துத் தாமரையாளாகிலும் சிதகுரைக்குமேல், என்னடியார் அதுசெய்யார், செய்தாரேல் நன்றுசெய்தார் என்பர்போலும்? எனும் பெரியாழ்வார் பாசுரத்திலுள்ள 'போலும்' என்கிற சப்தத்தைப் பற்றிய நிரர்த்தகவாதத்தை நிரஸனம் செய்து, 'நன்று செய்தாரென்பர் போலும் என்று சொல்லுகையாலே இது வஸ்து வ்ருத்தியில் நன்றன்று என்னுமிடம் ஸூசிதம், என்பதாக ப்ரபாவவ்யவஸ்தாதிகாரத்திலே ஆசார்யன் அருளியதை ஸமர்த்தனம் செய்கிறது இதில் இரண்டாம் பாகம்.

ஓர் பாம்பைப் பிடித்துக் கொண்டாட்டினாய் போலும் இத்யாதி ஸ்தலத்தில் போலும் சப்தமிருப்பதினாலே கண்ணன் வஸ்துவ்ருத்தியில் காளியமர்தனாதி சேஷ்டிதங்களைச் செய்யவில்லை என்றதாய்விடுமே என்று தமது 'ஸத்ஸம்ப்ரதாயபரித்ராண'த்தில் ஆபாதநம் செய்திருக்கிறார். இது ஆபாதசோத்யமே. போலும் என்பது உத்ப்ரேக்ஷை அல்லது உபமைக்குபோதகமாக ஆழ்வார் ஸ்ரீஸூக்திகளிலே காண்கிறது.

சந்திரமண்டலம்போல் தாமோதரன் கையில்
அந்தரமொன்றின்றி ஏறி அவன் செவியில்
மந்திரம் கொள்வாயே போலும் வலம்புரியே

என்பதாக நாச்சியார் பாசுரம். இதற்கு ' உம்மைப்பிரிந்து ஆற்றமாட்டாதார்பலருண்டு என்று திருச்செவியிலே சொல்கிறாப்போலே இருக்கிறது. அவன் செவியிலே ரஹஸ்யத்தைச் சொல்லுவான் போலே இருக்கை' என்று ஆச்சான்பிள்ளை வியாக்யானம். இங்கு போலும் என்றதினால் வஸ்து வ்ருத்தியில் வலம்புரியானது எம்பெருமான் செவியிலே ரஹஸ்யம் சொல்லவில்லைஎன்று ஸூசிதமாகிறது. என்றால் 'விளங்காய் எறிந்தாய்போலும் இத்யாதிகளில் போல் இங்கும் ரஹஸ்யம் சொல்லியது வாஸ்தவிகமே என்பார் 'போலுமிவர்'.

1. பாசியின் பசும்புறம் போலும் நீர்மை.
2. வேய் போலும் எழில் தோளிதன் பொருட்டா.
3. பரிதி வட்டம் போலும் சுடரடலாழிப்பிரான்.
4. ' தடமால் வரைபோலும்
5, மன்னிய திண்ணனவும் வாய்த்தமலை போலும்
6. வாய் கமலம்போலும், இத்யாதி ஆழ்வார் ஸூக்திகளில்காணும், போலும் சப்தங்களைப் பன்னியுரைக்கும்கால் பாரதமாம் இங்கு 'போலும்' என்றதனால் வஸ்துவ்ருத்தியில்

1. பாசியின் பசும்புறமன்று. 2. மூங்கிலன்று. 3. பரிதி வட்டமன்று, 4. 5. மலையன்று, 6. கமலமன்று என்று ஸூசிதமாவதை மறுக்க வொண்ணுதே. அதைப்போலவே வ்ருத்தத்திலும் போலும் சப்த ஸமபிவ்யாஹாரத்தினுல் வஸ்துவ்ருத்தியில் நன்றன்று என்றே தேறும். இங்கு போலும் சப்தமானது நிரர்த்தகம் என்பது சரியன்று ... என்று ந்யாயலக்ஷணத்தில் பட்டாசார்யபணிதி. ஓர் பாம்பைபிடித்துக் கொண்டாட்டினுய் போலும் இத்யாதி ஸ்தலத்திலும் ' என்பர்போலும், என்றவிடத்திலுமுள்ள போலும் சப்தங்கள் உத்ப்ரேக்ஷா போதகங்கள் என்பதை நூலாசிரியர் ஸவிஸ்தரமாக வ்யாக்யாநபணிதியைக் கொண்டே நிரூபணம் செய்திருக்கிறுர். உத்ப்ரேக்ஷையாவது ஸம்பாவனை, ... ஸம்சயஸ்தலத்தில் விஷய ஸ்திதியானது ப்ரமாணாந்தரத்தால் ஏற்படவேண்டும். விளங்காய் எறிந்தது முதலியது உண்மை என்பது சப்தாதிப்ரமாணகம்யமாகிறது. குற்றமும் குணமேதான் என்பதற்கு அத்தகையதொரு வேறு ப்ரமாணம் கிடையாது. மூதலிப்பதற்காக உதாஹ்ருதமாயுள்ள விபீஷண வ்ருத்தாந்தத்திலும் தோஷத்தை குணமாக்கவில்லை. ... தோஷம் பாராதே பரிக்ரஹித்தால் ஸத்துக்கள் கொண்டாடும்படியாம் கைவிட்டால அவர்கள் நம்மை கர்ஹிக்கும்படியாம் என்று ... துஷ்டனுலும் ஆச்ரிதனுல் அவனை பரிக்ரஹம் செய்வது மஹாகுணம் என்றே உள்ளது. இதனுல் தோஷமே குணமென்றதாகுமோ. தோஷத்தில் குணத்வ புத்தியானது ப்ராந்தியேயாகையால் அனந்த ஈசனிடம இசைய வொண்ணுது என்பதை இந்நூலிலே காணலாம்; உவமையிலும் போலும் என்பது

இங்கு சேரும். அப்போது நன்றன்று என்பது இதனாலேயே ஸூசிதமாகும்.

வாதியின் எண்ணத்தின்படி நன்றுசெய்தார் என்பர். போலும். என்று தோஷத்தையே குணமாகச் சொல்லியதாக கொண்டாலும் ப்ராமாதிக தோஷத்தைப்பற்றியே இந்த பாசுரமாகையால் புத்தி பூர்வோத்தராகத்தை குணமாகக் கொள்வதற்கு ஆழ்வார் ஸ்ரீஸூக்தியையோ அதன் வ்யாக் யானத்தையோ இவர் ஆதாரமாக நினைப்பதற்குமில்லை ப்ராமாதிகத்துக்கு நாமுளோம் என்றன்றோ செய்தது' என்பதாக இங்குற்ற வ்யாக்கியானம் 'நாயினேன் செய்த குற்றம நற்றமாகவே கொள். 'அநந்யகதியாய் உன்கைபார்த்திருக்கிற நான் ப்ராமாதிகமாகச் செய்த குற்றத்தையும் குணமாகக் கொள்ளவேணும் என்பதாக திருச்சந்தவிருத்தத்தில் விவரணம் போயபிழையும் புகுதருவாநின்றனவும், உத்தர பூர்வாகங்கள் ... ... உத்தராகமாவது ஸர்வஜ்ஞனும் பிறந்தால் ப்ரக்ருதிவாஸனையாலே ப்ராமாதிகமாகப் பிறந்தவை என்று திருப்பாவை வ்யாக்யாநம் அச்லேஷவசநம் ப்ராமாதிகவிஷயம், என்பதாக ததிகமாதிகரண ஸ்ரீபாஷ்யம். புத்திபூர்வத்தைப் போலன்றிக்கே அச்லேஷவிஷயமாவதை ப்பற்றி ப்ராமாதிக பாபத்தை குணமென்பதாதவே இவர் கொண்டாலும் புத்திபூர்வோத்தராகத்தையும் குணமாக்கு வதற்கு ப்ரமாணமொன்றுமில்லை,

ப்ரக்ருத பாசுரத்தில் சிதகுரைக்குமேல் என்றகினுல் ப்ராமாதிக மொன்றையே பிராட்டி சுட்டிக் காட்டியதாகக் கொள்வதற்குமில்லை. குற்றங்காட்டுமவள் புத்திபூர்வத்தையும் காட்டுவதன்றோ பொருந்தும்? உபக்ரமத்திலுள்ள தோஷ வாசி சப்தத்தை ப்ராமாதிகபரமாக ஸங்கோசிக்கவும்வேண்டா. ஆகவே அது உபயவாதமே. ஆகிலும் அதற்கு ஸங்

கோசம் கொள்ளுமிவர் புத்தி பூர்வபரமாகவே ஸங்கோசம் செய்யலாமே அதுவஸ்து வ்ருத்தியில் நன்றன்று என்று கொண்டு போலும் சப்த ஸம்ப்ரதாய ஸார ஸர்வஸ்வத்தை இசைவது உசிதமாகும்,

'யே தத்ர ப்ராஹ்மணா: ஸம்மர்சிந: யுக்தா ஆயுக்தா: அலூக்ஷா தர்மகாமா: ஸ்யு:' என்று வேத புருஷன் கொண்டாடும் குணவிசேஷமுள்ள இந்நூலாசிரியரைப்போன்ற ஸம்ப்ரதாய வாணிகளின் மூலம் ஆழ்வார் ஆசார்ய ஸ்ரீஸூக்திகளில் விசேஷார்த்தங்களை அக்ஷரபத ஸ்வாரஸ்யங்கள் உள்படக் காட்டும் க்ரந்தங்கள் மேன்மேலும் அவதரிப்பதற்கு ஸாம்ப்ரதாயிகார்த்த நிரூபணமாக அவகாசம் ஏற்படுத்திக்கொண்டிருக்குமாறு ஆசார்ய பக்தர்களையும் விசேஷித்து க்ருஷ்ண த்ருஷ்ணா தத்வாவையும் வேண்டிக்கொள்ளுகிறேன்.

**தி. ஈ. வீரராகவாசார்யன்.**

ஸ்ரீ மதுராந்தகம்.

॥ ஸ்ரீ: ॥

ஸ்ரீதேவாதிராஜபரப்³ரஹ்மணே நம: ॥

# கோதை-போலும்

வேதா³ந்தாசார்யவித்³யாதோ³ரங்கஸம்பத்ஸமாவஹ: ।
தே³வோ வா தே³ஶிகோ வா தி³ஶது ததா³ஸ்தம்பதஸ்ஸஸ்த்வம் ॥

ராமோ வ்யதீதோ ஜக³த³ஸ்த்வப³ந்து⁴ம்
க்ருஷ்ணோ வ்யதீதோ ஜக³த³ஸ்த்வப³ந்து⁴: ।
ஸ்ரீவாஸஸந்தோஷவிதூ⁴மகா³த்ம தயாஸ்த்வ
விக்ரம் கிமத்ரேதி பத ப்ரியேஹ ॥

ஸரோஜவஸி நாத² ஸரஸ்வ தே³ஹி மே
கவிஹம்ஸரந்த்⁴ரஸிவமரகஸேவர ।
உபபந்த⁴மூர்த்தபரஸ்வ ஸக்ருதி-
ஷ்வநவாம் ஸஜஞ்ஞ மநோஜாஸ்வமக்ருதி: ॥

ஸ்ரீ:

# கோதை.

## I

'வம்பவிழ் கோதைபொருட்டா மால்விடை யேழுமடர்த்த' என்கிற நம்மாழ்வார் ஸ்ரீஸூக்திக்கு உரையிட்ட பெரியோர்கள்—

> 'நறு நாற்றம் புறப்படா நின்றுள்ள பூமாலையையுடைய நப்பின்னைப்பிராட்டிக்காக' என்றும்
>
> 'வம்பு-செவ்வியையுடைத்தாய், அவிழ்-மலர்ந்த கோதை பொருட்டா-மாலையையுடையளான நப்பின்னைப் பிராட்டியைக்கிட்டுகையாகிற புருஷார்த்தமே ஹேதுவாக' என்றும்

அருளிச்செய்தார்கள். கோதை என்பது மாலை. அதற்கு விசேஷணம் வம்பவிழ் என்பது. அன்மொழித் தொகை என்னும் பஹுவ்ரீஹி ஸமாஸத்தினால் அவ்வித மாலையையுடைய ஒருவரை இப்பதம் குறிக்கும். அவர் பொருட்டா மால்விடையேழுமடர்த்ததை மேலே கூறினமையால் அவர் நப்பின்னைப் பிராட்டியார் என்று கிடைக்கின்றது.

'வம்பு-பரிமளம், அவிழ்கை-அத்தைப் புறப்படவிடுகை கோதை-மாலை, பொருட்டா-அவ்வொப்பனை யழகுக்குத் தோற்று' என்று மற்றோர் வ்யாக்யானம். ஒப்பனையாவது ஒப்புமை: ஸாத்ருச்யம். 'வம்பவிழ்மாலை போன்றவளான நப்பின்னைக்காக' என்றதாயிற்று. இப்போது பஹுவ்ரீஹி இல்லை. ஸத்ருசலக்ஷணை மாத்திரம். 'ஒப்பனை என்று ஏற்றதாயிருத்தல், அணிந்துகொண்டிருக்கும் மாலைக்கும் பிராட்டிக்கும் ஆநுரூப்யம் கூறப்பட்டது ஸாத்ருச்யமன்று' எனில் முன்போல் பஹுவ்ரீஹியேயாம்.

இப்பாசுரத்தின் ஸாரத்தை ஸங்க்ரஹிக்குப்போது

ஸ்ரீதேசிகன் தாத்பர்யரத்நாவளியில் ‘கோதாயை ஸாக்ஷாவஸதே’ என்றார். நீளாயை ஸாக்ஷாவஸதே என்றுவது, ஏழு வ்ருஷபங்களை அடர்த்து பரிக்ரஹணம் பண்ணினது துல்யமாயிருப்பதைக்கொண்டு கல்பவிசேஷத்திலே நக்நஜித் புத்ரியாகவும் நப்பின்னைப்பிராட்டி அவதரித்தாள் என்ற பக்ஷத்தில் நக்நஜித் புத்ரியான இப்பிராட்டிக்கு ‘ஸத்யா’ என்று ஸ்ரீபாகவதத்தில் திருநாமம் காண்கிறபடியால் ‘ஸத்யாயை ஸாக்ஷாவஸதே’ என்றுவது ஸாதித்திருக்கலாம். அப்படியில்லாது ‘கோதா’ என்னும் பதத்தை எடுத்தாண்டது இவ்விடத்தில் வேறொருவிதமான வ்யாக்யானமும் செய்யலாமென்று ஸூசனம் பண்ணுவதற்காக.

என் கண்புனை கோதை இழந்தது கற்பே

என்ற ஸ்ரீஸூக்தியிலுள்ள கோதை என்னும் பதத்திற்குப் பலவிதமாக உரையிட்டிருக்கிறார்கள்—

அ. தர்சநீயமான திருக்குழலையுடைய என் பெண் பிள்ளை.

ஆ. கண்டாருடைய கண்ணைப்பிணிக்கவல்ல அழகையுடைய என் பெண்பிள்ளை.

ப. கண்டார் கண்களைப் புனைந்துகொள்ளும் மாலையழகையுடைய என் பெண்பிள்ளை.

இ. கண்டார் கண்களை ஆபரணமாகவுடைய மயிர்முடி அதாகிறது—கண்டார்க்கு வைத்தகண் வாங்கவொண்ணாதபடி கண்ணைப்பிணிக்க வற்றாயிருக்கை. ‘கண் என்று பீலிக்கண்ணாய் அத்தைப் புனைந்த கோதை என்று ஜாத்யுசிதமான ஆபரணம்’ என்றான் ஒரு தமிழன்.

வம்பவிழ் கோதையென்னுமிடத்தில் வாஸனையைச்

சொல்லுகிற வம்பு பதமிருப்பதால் கோதை என்ற பதத்திற்கு எல்லோரும் மாலை என்ற பொருளே கொண்டார்கள். இங்கு கண்புனை என்ற விசேஷணத்தை அந்வயிப்பதற்காக அழகை நடுவிலிட்டு அதையுடைய ஒரு பொருள் கூறவேண்டு மாகையால் அது எந்த பொருளாயிருக்கலாமென்பதில் பலர் பலவிதமாகக் கருதினர். ப்ரஸித்தமான மாலை என்ற பொருளையே கொண்டு அது அழகுடையதென்றார் ஒருவர். மேலே தரிக்கப்படும் மாலையைக் காட்டிலும் உடம்பின் ஒரு பாகத்திற்கே அழகைச் சொல்வது மிகப்பொருத்தமுள்ளதென்று கருதி மயிர்முடி என்றார் மற்றொருவர். முழு உடம்பிற்கே அவ்வழகை ஏன் சொல்லக்கூடாதென நினைத்து அழகையுடைய என் பெண்பிள்ளை என்றார் இன்னுமொருவர். மாலை மயிர்முடி என்றவர்த்தம் சொல்லும்போது கண்புனைகோதை என்பது பஹுவ்ரீஹி. பெண்பிள்ளை என்னும்போது கர்ம தாரயமே. கோதை என்னும் சொல் மாலைக்கு வாசகம். அதாவது அபிதா லக்ஷணை என்ற இரண்டுக்குள் அபிதா எனப்படும் சக்தியால் அதை உணர்த்தும். மென்மை முதலான குணங்களால் மாலைபோன்ற பெண் என்றவர்த்தத்தை லக்ஷணையால் உணர்த்தும். இங்கு கோதை என்னுஞ்சொல் லக்ஷணையால் பெண்ணையே உணர்த்துகிறதென்று பெண்பிள்ளை என்று வ்யாக்யானித்தவருக்குக் கருத்து. விற்புருவக் கொடி என்றவிடத்தில் கொடி என்றசொல் இவ்விதமே பெண்ணைக்குறிக்கிறதென்பது வெளிப்படை. அதேபோன்றது கோதை என்ற சொல்லும். விளையாட்டியேன் கோதையே என்று விசேஷணமொன்றுமில்லாமலே பெண் என்ற அர்த்தத்தில் கோதை என்னும்சொல் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. மற்றப்பாட்டுக்களில் 'பாவையே' 'மடந்தையே' என்ற ஸ்தானத்தில் இங்கே 'கோதையே' என்றார். பிள்ளானும்

'இவள்' என்றிவ்வளவே இதன் விவரணமாக ஸாதித்தார். அகராதிகளிலும் இதற்குப் பெண் என்றவர்த்தம் காட்டப் பட்டிருக்கிறது. 'நறுமலர்க்கோதைக்கு நன்னெறியுரைத்து' என்ற மணிமேகலை ப்ரயோகம் எடுத்துக் காட்டப்பட்டிருக் கிறது. மலர் என்று தனியே கூறினவிடத்தில் மாலை என்று மறுபடியும் கூறல் தகாதென்று கருத்து. பழைய தமிழிலக் கியங்களில் பெண்ணென்ற பொருளில் கோதை என்னும் சொல் மலிந்து கிடைக்கின்றமையால் நிரூடலக்ஷணையே இச் சொல்லுக்கு அப்பொருளில் உள்ளதெனல் வேண்டும். ஆகை யால் கண்புனை கோதை என்றவிம்மாதிரி விடங்களில் பெண் ணென்ற பொருளையே கொள்வது தகும். சீர்கெழுகோதை என்ற பெரியதிருமொழி ஸ்ரீஸூக்தி வ்யாக்யானத்தில் 'கல் யாண குணங்களால் குறைவில்லாத இப்பெண்ணுனவள்' என்றே உரைக்கப்பட்டது. இதனுல் பெரியதிருமொழியில்

தளையவிழ் கோதை மாலை யிருபால் தயங்க

என்றவிடத்தில் கோதை என்று பொதுவாகப் பெண்ணையும் ப்ரகரணத்தால் விசேஷித்து பெரியபிராட்டியையும் கூறுகிற தென்றுகொண்டு 'அகிலகில்லேனிறையு மென்றபடியும் க்ஷூஜிநெந ஸம்வ்ருணுத என்றபடியும் ந்ருஸிம்மாவதாரத் திலும் திருமார்பிலிருந்த பிராட்டியின் மாலை தளையவிழ்ந்து இருபால் தயங்க' என்று வ்யாக்யானிக்கலாமாகையால் கோதை தொடைகொள்மாலை அதாவது விட்டு விட்டுத் தொடுத்த ஸரங்கள், மாலை பூமாலை அதாவது நெருக்கத் தொடுத்த மாலைகள் என்று கஷ்டப்பட்டு வ்யாக்யானிக்க வேண்டிய நிர்ப்பந்தமில்லை என்பதும் விளங்கும். ஹிரண்ய கசிபுவின் வதத்திற்காக நரஸிம்ஹரூபமெடுத்துப் பெருமாள் மிகுந்த கோபாவேசங்காட்டினபோது தேவர் முதலானோர் யாவரும் நடுநடுங்கி அக்கடுங்கோபாவேசந் தணியும்படி

பெருமாளிடத்தில் நெருங்கி யாசிப்பதற்காக மகாலக்ஷ்மியை ப்ரார்த்தித்தார்கள். அவளும் அப்போது அணுகப் பயப்பட்டாள் என்று ஸ்ரீபாகவத புராணங்கூறிற்று. புராணாந்தர வ்ருத்தாந்தம் ஸ்ரீமத்ரஹஸ்யத்ரய ஸாரத்தில் த்வயாதிகாரத்தில் ஸாதிக்கப்பட்டது. திருமார்பில் நித்யவாஸம செய்யும் மூர்த்தியான பெரியபிராட்டியே அப்போது பெருமாளுக்குண்டான ஒரு உக்ரஸ்திதியைப் பார்த்துப் பதறி ஒன்றுஞ் செய்யமுடியாது தவித்தாள் என்றிங்கு ஆழ்வார் அனுபவம*

கோதை வேல் ஐவர்க்காய் மண்ணகலம் கூறிடுவான்
தூதனாய் மன்னவனால் சொல்லுண்டான் காணேடீ

என்ற பெரிய திருமொழிப் பாசுரத்தில் 'மாலையையும் வேலையும் தரிக்கிற பஞ்சபாண்டவர்களுக்காக' என்று வ்யாக்யானம்பண்ணி மாலைகளை அவர்கள் அப்போது தரிக்கவில்லையே என்னில் தரிக்காவிட்டாலும் தரிக்க ஸ்வரூப யோக்யதை உண்டு என்றார்கள். கோதை பெண் அதாவது த்ரௌபதி அவளுக்காக அவள்க்லேசந் தீருவதற்காக ஆயுதங்களைத் தரிக்கும் ஐவர்க்காய், அதவா கோதை என்ன வேல் தரிக்கும ஐவர் என்ன இவர்களுக்காக என்றவர்த்தம மிகப் பொருத்தமுள்ளது.

ஆக இவ்வளவால் கோதை என்னுஞ்சொல் பெண்என்ற பொருளில் ப்ரஸித்தம் என்பதாயிற்று.

மாலையு மாதருங் கைத்தோற் கட்டியு
முடும்புங் குழலுங் காற்றுஞ் சேரனு
மொழுங்கு மியமுங் கோதை யென்ப

என்ற பிங்கல நிகண்டுவும் இங்கே காண்க.

---

* 'வண்டலர்கோதை மாலையுண் மயங்கி' என்ற சிலப்பதிகார ப்ரயோகத்தில்போல் கோதை மாலை என்று சிறந்த மாலை என்று பொருள்படும்படி ஒரு பொருளிருசொல்லாலாகிய ஒரு பண்புத் தொகை என்பது ஒரு வழி.

# II

ஆகவே வம்பவிழ் கோதை என்றவிடத்திலும் அப்பொருளே கொள்வதும் தகும் என்று முடிந்தது. இனி வம்பவிழ் என்னும் விசேஷணம் பெண் என்னும் விசேஷ்யத்தில் அந்வயிக்குமாவென்று பார்த்தால் அப்படி அந்வயிப்பதில் குற்றமொன்றுமில்லை. 'வம்பார் குன்றம்' என்று தமிழர் வழக்குண்டு. குன்றம் வாஸனை நிறைந்திருப்பது அதனிடத்துள்ள பல வாஸனை வஸ்துக்களால். அதுவேபோல ஸ்வபாவத்தாலும் [illegible]களாலும் பெண் வாஸனையைப் பரவச்செய்கிருள் என்பதில் குற்றமொன்றுமில்லாததோடு அர்த்தபுஷ்டியுமுண்டாம்.

'வம்பவிழ் வானவர் வாயுறை வழங்க' என்றவிடத்தில் இப்படியே சொல்லவேண்டும்

> வம்பவிழ்க்கும் வானவர்கள் வாயுறையை வழங்கா நிற்க, மாநிதி கபிலையொண் கண்ணுடி முதலான பெருமாள் படிமைக்கலங் காண்பதற்கேற்ற பொருள்களை எடுத்துக்கொண்டு நன்முனிவரான தும்புரு நாரதர் புகுந்தார்

என்று அவ்விடத்தில் வாக்ய அமைப்புக்கேற்ற அந்வயமும் பொருளும் கூறவேணும். தேவர்கள்போல் தேவர்ஷிகளும் மாநிதி கொணரலாம். வாயுறை என்பதற்கு அருகம்புல் என்றவர்த்தம் கொண்டாலும் அதையே தேவர்கள் பெருமாளுக்கு உபசாரமாக வழங்குகிருர்கள் என்றே அதை [illegible] உதர்யாதிகள்போல உபலக்ஷணமாக்கி உசிதமான வேறுபொருள்களும் ஸமர்ப்பிக்கக் கொணர்ந்தார்களென்றே கருத்துக்கொள்வது உசிதம். இப்படியல்லாதபோது தூராந்வயமும் அத்யாஹாரமும் வரும். ஆனல் வாயுறை என்பதற்கு வேறு பொருளும் உளது. பாக்களை வரையறுத்துக் கூறும்போது

வாயுறை வாழ்த்தே யவையடக் கியலே
செவியறி வுறூஉவென வவையு மன்ன.

என்றார் தொல்காப்பியனார். இவ்விடத்தில் பேராசிரியர் உரை இவ்விதம் காண்கிறது:

வாய் வாய்மொழி. உறை மருந்து. வாயுறை என்பது சொன்மருந்தென பண்புத்தொகையாம். இனி வாய்க் கட்டோன்றிய மருந்தென வேற்றுமைத் தொகையு மாம. மருந்து போறலின் மருந்தாயிற்று.

பரமஹிதத்தைத்தரக்கூடிய வாய்மொழி வாயுறை எனப்படுமென்றதாயிற்று. 'ஸவஸயஹெஷஜஸெதக' என்று ஸ்ரீ தேசிகனும் 'மாறன் சொல் மருந்தாக' என்று மாமுனிகளும் அருளிச்செய்தார்கள. 'வானவர் பரமஹிதமான ஸ்தோத்ர காதைகளைச் சொல்லாநிற்க' என்று 'வானவர் வாயுறை வழங்க' என்பதன் பொருள். இப்படி ஸ்வரஸமான பொருளுடைய இத்தொடர்மொழியில் வம்பவிழ் என்னும அடை தனக்கடுத்த வானவர் என்பதற்கே உரியதென்பது வாக்யந்யாயத்திற்கு ஒத்தது அப்போது கீழ்ச்சொன்ன படியே பொருளும் கருத்துமாகும். இனி வம்பு புதுமை என்றுரைத்துப் புதுமையை அவிழ்க்கும் அதாவது நித்யயௌவன சாலிகளான என்றுங்கொள்ளலாம். வம்பு கலஹமாய் பெருமாளுடைய ப்ரதம கடாக்ஷத்திற்குப் பாத்ரமாவதற்காக நான் முன்னே நான் முன்னே என்று பரஸ்பரம் ஒரு சின்ன சண்டையிட்டு நிற்குமவர் என்பதும் பொருந்தும்.

'ஸநெ்யாந்யஂக்ஷிவதாஜஹஂவூயஜிகாஸஂஜெ௨கொஸாஹயஂ' என்றார் ஸ்ரீதேசிகன். 'பிணங்கி யமரர் பிதற்றும்' என்றார் ஆழ்வாரும் இவ்வர்த்தங்களும் வமபவிழ்கோதை என்றவிடத்தில் பொருத்தமுள்ளன. ஸ்ரீகிருஷ்ணனைப் பார்த்த

வுடனே இவருக்கே நான் வாழ்க்கைப்படுவேன் என்று வம்பு செய்தாள் ஸ்ரீநப்பின்னைப்பிராட்டி. இப்படிச்சீர்கெழுகோதை என்றவிடத்தில்போல் கோதை என்பதை விசேஷ்யமாகவும் வம்பவிழ்வானவர் என்றவிடத்தில்போல் வம்பவிழ் என்பதை சேதனவிசேஷணமாகவும் வைத்து வம்பை அவிழ்க்கிற ஸ்திரீ ரத்னமான நப்பின்னைப்பொருட்டு என்று வம்பவிழ்கோதை பொருட்டா என்ற ஸ்ரீஸூக்திக்குப் பொருள் கொள்ளலாமென்று முடிந்தது.

## III

இப்படித் தமிழ் வழக்கில் ப்ரஸித்தமாய் பொதுவாகப் பெண்ணைக் கூறும கோதை என்னும் சொல்லையே விசேஷமாகத் தமது அரும்புதல்விக்குப் பேராகச் சாற்றினர் ஸ்ரீபெரியாழ்வார் எனல்வேண்டும். இதில் ஐயமொன்றில்லை. கோதை என்னும் தமிழ்ச்சொல் கொடா என்னும் வடமொழியின் திரிபா அல்லது இயற்சொல்லா என்ற விசாரம் ரஸவத்தாயிருக்கும். கோதா: என்ற பதம் தேவா: என்பதுபோல் ஆகாராந்த புல்லிங்கமாக ரிக்வேதத்தில் (1. 42) ப்ரயோகிக்கப்பட்டிருக்கிறது. கோவைக் கொடுக்கிறவன் என்று அதன் அர்த்தம். சேரராஜனுக்குக் கோதை என்ற பெயர் உண்டு. 'மாவள்ளீகைக் கோதையும்' என்பது புறநானூறு. இப்போதும் கோத(கொட)வர்மா என்று பெயரிடும் வழக்கம் இருக்கின்றது. ஆயிரத்துக்கு மேற்பட்ட வருஷங்களுக்கு முற்பட்ட காசிகை என்னும் வ்யாகரணக்ரந்தத்தில் கொடூள ரமணீயள என்று உதாஹரணம் காண்பிக்கப்பட்டிருக்கிறது. இதில் கொடூள என்றதற்கு 'கொடயொ நிஓவா ஸ:' என்று விவரணம் செய்யப்பட்டிருக்கிறது. இவற்றினை யோசித்துப் பார்க்கும்போது கொட அல்லது கொடா என்றிப்படி சப்த

ப்ரயோகம் ப்ராசீனமாக வடமொழியில் இருந்ததென்றே தோன்றுகிறது. கௌதாநமங்களம் என்று ஒரு ஸம்ஸ்கார முண்டு. இதில் கோ என்பதற்கு கேசம் அதாவது மயிர் என்று பொருள் கூறப்பட்டிருக்கிறது. கோதாநம் மயிரைக் கத்தரித்தல். தாநம் என்பதற்கு வேறு பொருள் இருந்து கோதானபதமே தமிழில் மயிர்முடி என்ற பொருளில் கோதை எனத் திரித்து வழங்கப்பட்டதோ எனத் தோன்று கிறது. பிங்கல நிகண்டுவில் கூறப்பட்ட 'கைத்தோற்கட்டி' என்ற பொருளில் கோயா என்ற ஸம்ஸ்கிருத சொல்லே கோதை என்று திரிந்திருக்கிறது என்பது ஸ்பஷ்டம். கோதா என்ற பதமும் காந்தியைக்கொடுக்கிறது என்றிம்மாதிரியான காரணத்தினுல் பெண் மாலை முதலான பொருள்களில் இருந்து தமிழில் திரித்து உபயோகப்படுத்தப் பட்டிருக்கலாம். இவ்வித திருவுள்ளத்துடனே அதவா தமிழ் பதமே தான் அது என்று வைத்தோ ஆண்டாளின் கோதை என்கிற இத் திருநாமத்தை ஸம்ஸ்க்ருதத்தில் எடுத்தாள விரும்பிய பெரியோர் கோதா என்றுர்கள்.

## IV

இப்படி ஒரு வ்யக்தியையே குறித்த அந்தத் தமிழ்வார்த்தையை கோதா என்று ஸம்ஸ்க்ருதத்தில் அநுவாதம் செய்த பிறகு பொதுவாகப் பெண்ணைக் குறிக்கும் அதே வார்த்தையை அதே ஸம்ஸ்கிருத பதத்தால் அனுவாதம் செய்வதில் குற்றமொன்றுமில்லை. பின் "பொதுவாகப் பெண் என்ற பொருளிலும் கோதை என்னும் தமிழ்ச் சொல் ப்ரஸித்தம் என்றும், அதையே வம்பவிழ் கோதை என்ற விடத்தில் அர்த்தமாகக் கொள்ளலாமென்றும், இக்கருத்தாலேயே பிள்ளான் மாலை மயிர்முடி ஒன்றும் எடுக்காது 'நப்பின்னைப்

பிராட்டியோடு' என்றே விவரித்தார் என்றும், இச்சொல் வரும் மற்றவிடங்களிலும் ஸ்வரஸமானபோது இவ்வர்த்தத்தையே கொள்ளலாமென்றும், வம்பவிழ் என்பது பெண்ணுக்கே விசேஷணமாகலாமென்றும், திருப்பள்ளியெழுச்சியில் இப்படியே கொள்ளவேண்டுமென்றும், இதையெல்லாமனுஸரித்து வம்பவிழ்கோதை பொருட்டா என்ற ஸ்ரீஸூக்திக்கு முன் சொன்னதுபோல் அர்த்தாந்தரம் உரைக்கலாமென்றும், இப்படிப் பல விஷயங்களை வ்யஞ்ஜிப்பதற்காக கோதாயை ர்க்ஷாவஸ்தை என்று நீளா, ஸத்யா முதலிய ஸுப்ரஸித்த சிக்ரோபஸ்தித பதங்களை விட்டு கோதா என்ற பதத்தை ஸமர்த்த மஹாகவிகளுக்குரிய அவதானத்தோடும் தாத்பர்யத்தோடும் ப்ரயோகித்ததென்று உற்று நோக்கிக் களித்தல் தகும்.

கி. பி. 1684 முதல் 1712 வரையில் தஞ்சாவூரில் அரசாண்ட ஸாஹஜி என்று ப்ரஸித்த ஒரு ராஜா இயற்றிய, பரோடாவில் ப்ரசுரிக்கப்பட்ட, சப்தரத்ன ஸமந்வய கோசம் என்ற கோசத்தில் 172-வது பக்கத்தில் கோதா கோதாவரீ-நத்யாம் கோதா யோஷிதி கத்யதே என்று கோதா என்ற ஸம்ஸ்கிருத பதம் யோஷித் எனப்படும் ஸ்த்ரீ என்ற பொருளைக் கூறும் என்று ஸ்பஷ்டமாகக் கூறப்பட்டிருக்கிறது. தமிழை அனுஸரித்து இந்த கோசம் ஏற்பட்டதா அல்லது ஸம்ஸ்கிருதத்திலேயே இப்பதம் இவ்வர்த்தத்தில் உண்டு என்ற கருத்துடன் ஏற்பட்டதா என்ற இவ்விரண்டு விகல்பங்களில் எது உண்மையாயினும், கோதா கோதை என்ற இரண்டு பதங்களும் பொதுவாகப் பெண் என்ற பொருளில் உபயோகிக்கப்பட்டு வந்தன. உபயோகிக்கப்படக்கூடியவை. என்பது தெள்ளென விளங்குகின்றது. ஒரு பதத்திற்கு

அநேக அர்த்தம் சொல்லுமிடத்தில் அப்பதத்தை ஆவ்ருத்தி பண்ணுவது சில கோசகாரர்களின் வழக்கம். இந்த கோசத்தி லேயே '[illegible]' என்று மோதபத்திற்கு அர்த்தங்களைக் கூறும்போது ஆவ்ருத்தி செய்யப்பட்டிருக்கிறது. இதுபோலவே [illegible] பதத்திற்கும் ஆவ்ருத்தி என்று கண்டு கொள்வது.

பொதுப்பெயரால் விசேஷார்த்தத்தைக் குறிப்பது வட மொழியிலும் வழக்கம். '[illegible]' '[illegible]' என்ற காளிதாஸ ச்லோகங்களில் நரேந்த்ரகன்யா அராளகேசீ என்ற சொற்கள் இந்துமதியை ப்ரகரணத்தால் குறிக்கின்றன. [illegible] என்றவிடத்தில் [illegible] என்பது ஸரஸ்வதியையும் [illegible] என்பது பார்வதியையும் குறிக்கின்றது. இப்படிப் பல்லாயிரமுண்டு. ஆகவே [illegible] பதமும் நப்பின்னைப்பிராட்டியைக் குறிக்கும்.

[illegible] என்று அவதாரிகையிட்டு அதனாலேயே தாத்பர்யரத்னாவளி ஸூக்தி உதாஹரிக்கப்பட்டதாகக் கருதிய ஸ்ரீ ரங்கராமானுஜஸ்வாமி

> வம்பவிழ் கோதை போருட்டா [illegible]
> [illegible]

என்று இவ்விடத்தில் வ்யாக்யானம் பண்ணி விசேஷண முள்ளவிடத்தில் இப்படி பஹுவ்ரீஹியாகக் கொள்ளலா மென்று ஸூசிப்பித்து, வினையாட்டியேன் கோதையே என்ற விடத்தில்

கோதையே சாசர ஸாத்ருஶ்யம் கந்யாத்ரயம:

என்று விவரித்து விசேஷணமில்லாமல் கோதை என்று மாத்திரம் இருக்குமிடத்தில் இது பெண்ணைச் சொல்லும் என்றும், இதுவே கோதாயை ராக்ஷாவதேத: என்றவிடத்திலும் கோதா பதத்திற்கு அர்த்தம் என்றும் வ்யஞ்ஜிப்பித்தார்.

---

சொல்லொன் றெடுத்ததனுள் சீரார் செகமெல்லாம்
மல்லொன்று மின்றி மடுத்தாங்கு—கல்லன்ன
சித்தமும் தான்குழையச் சொற்பொழியும் தூப்புல்வரு
மூத்தமன் வித்தைக் குயிர்.

---

முதல் பாகம் முற்றிற்று.

---

இரண்டாம் பாகம்

# போலும்

—o—

## I

போலும் என்றது ஓர் இடைச்சொல். இது நன்னூலில் அசைநிலையிருபதுள் ஒன்ருக எடுக்கப்பட்டிருக்கிறது. ஆயினும் தொல்காப்பியத்தில்

அம்ம கேட்பிக்கும். ஆங்க வுரையசை

என்ற ஸூத்ரங்களுக்குப்பின்

'ஒப்பில் போலியு மப்பொருட் டாகும்'

என்று உரையசையென்று தனியே காட்டப்பட்டிருக்கிறது. இவ்விடத்தில் சேனவரையர்

மங்கல மேன்பதோரூருண்டு போலும்

என்று உதாஹரணங்காட்டிப் பிறகு

அசைநிலையும் பொருள் குறித்தல்லது

நில்லாமையின் அப்பொருட்டாகும் என்ருர்

என்று ஒரு விசேஷமும் விளக்கினர். இதனல் இவர் காட்டிய உதாஹரணத்தில் போலுமென்பது ஒரு பொருள் குறித்தே நின்றதென்பது ஸ்பஷ்டம். பொருளுடைய ஒரு சொல் நூற்களில் காணப்பட்டபோது அதன் பொருளை அவச்யம் எடுத்துக்கொண்டு வாக்யத்தின் கருத்தைத் தீர்மானிக்கவேண்டும் இது வாக்யந்யாயம். அப்படிக்கில்லாது இருக்குஞ் சொல்லுக்கு அதன் பொருளொன்றிருக்கும்போதே அதை உபேக்ஷித்து மற்றப் பதங்களின் அர்த்தத்தைக் கொண்டே வாக்யத்தின் கருத்துத் தீர்மானிக்கப்படுமாயின் அது ப்ரமாணமின்றிக்கே நாமாகச்செய்த தீர்மானமாகுமேயன்றி நூலாசி

ரியரின் கருத்தாகமாட்டாது. சிலவிடங்களில் சிலவர்த்தங் களுக்கு அவிவக்ஷை என்று மீமாம்ஸகர்கள் கூறுவர். அவ் விடங்களிலும விவக்ஷிக்கப்படாத வர்த்தங்களுக்கு விதி யோடு ஸம்பந்தமில்லை என்பது மாத்திரமே தவிர அவ்வர்த் தங்களுக்கு ஒரு பிரயோஜனமுமில்லை என்று அவர்கள் கொள்ளவில்லை. விதிக்கப்படும் பொருளை உயர்த்தியோ தாழ்த்தியோ கூறி அவைகளும் ப்ரயோஜனமுள்ளவை களேயாமென்பர். ஆகையால் ஒரு சொல்லுக்குப் பொரு ளுண்டாயின் அதையும் சேர்த்து வ்யாக்யானிப்பது அவச்யம

மங்கல மேன்பதோரூருண்டு போலும்

என்ற உதாஹரணத்தில் போலும் என்பது உவமைப் பொரு ளில் வராது வேறொரு பொருளில் வந்தது. அப்பொருளாவது தோற்றம அல்லது ஸம்பாவனை. மங்கலமெனப்படும் ஓர் ஊர் உண்டெனத் தோன்றுகின்றது. உண்டென்று எண்ணு கிறேன் என்று. 'ஸம்ஜதீதி கஶ்ச்வொஸொஸ்த்வஸீவ' என்றபோது

ஐவ பதத்திற்கு என்ன அர்த்தமோ அதே அர்த்தம் இவ்விடத் தில் போலுமென்பதற்கு. கீழ்ச்சொன்னமாதிரி ஐவசப்தத்தி ற்கும் பொருளை விவக்ஷிக்காமல் ப்ரயோகம் கிடைப்பதரிது. 'கிஜிவ ஹி யேஷாணாம் ஜ்ணநம் நாக்ஷ்ரதீநாஞ்' ஐதஸ்ராதிஸ்த லங்களில் அதற்கு அர்த்தமில்லாமல் இல்லை. எதுதான் அழ காகாது என்பது அங்கே விவக்ஷிதம். எது அழகாகாது என் பதற்கும் எதுதான் அழகாகாது என்பதற்கும் மிகுந்த வாசி இருப்பது ஸ்பஷ்டம். கஐவ கெவ கிஷிஜிவ கயஜிவ என்று ப்ரயோகிக்குமிடங்களிலெல்லாம் இந்த விசேஷமுண்டு. இதை நவீநகோசகாரர்களும் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இவ்விடங்களிலெல்லாம் ஸ்ரீயெ வஷெஷிஷாக்ஷ்ரதெவ ஷெவாஃ என்ற ரிங்மந்த்ர பாஷ்யத்தில் உள்ளபடி கவயாா

ணார்த்தத்தில் பர்யவஸானம். க்ரியாபிவ வ்யாபாரக் கிம் வதிநோ ணஃ ஸம்பாவிதஃ ந ஸ்வபாவோக்த்யாவீத்ர்யது: ஸம்பாவநாயாமிவ ஶப்தஃ என்று பாதுகாஸஹஸ்ரவ்யாக்யாதா சொன்னார்.

ப்ரக்ருதத்தில்

உத்ப்ரேக்ஷா வ்யஜ்யதே ஶப்தைரிவஶப்தோऽபி தாத்ருஶ:

என்று தண்டி சொன்னபடி உத்ப்ரேக்ஷை அல்லது ஸம்பாவனை என்ற வர்த்தம், அல்லது தீர்மானமில்லாத ஒரு எண்ணம் என்ற வர்த்தம் கொள்ளப்படும். இவ்விதமான ஒரு அர்த்தவிசேஷத்தைக் கருதி திவ்யப்ரபந்தத்தில் பலவிடங்களில் ஆழ்வார்கள் போலும் என்ற சொல்லை எடுத்தாண்டு அத்புதமான த்வனிப்பொருளை உணர்த்தியிருக்கின்றார்கள்.

II

க்ஷணப்ராப்யதேதகஃ ஸ்துதிஶப்தகஃ என்று புகழப்பெற்றத் தமது திருமொழியில் ஸ்ரீ பெரியாழ்வார் யஶோதாபாவத்தாலே ஸ்ரீ கிருஷ்ணனை அனுபவிக்கப் புகுந்து அவ்வேராரங்க கண்ணி சிறுகாலையிலேயே ஸ்ரீ கிருஷ்ணனை கன்றுகள் மேய்க்க அனுப்பிவைத்துப் பிறகு அவன் திரும்பி வரும்போது அவனழகை யனுபவித்தபடியைச்சீலக்குதப பையில் அவள் பாசுரமாகவே பேசுகிறார். ஸ்ரீ கிருஷ்ணன் வெளியிற் சென்றதும் 'என்றுமெனக் கினியானை என் மணிவண்ணனை கன்றின்பின் போக்கினேன்'னென்று கதறிய யசோதை அவன் நினைவாகவேயிருந்து 'அவன் வரும் ஸமயமாயிற்றே. இன்னும் வரவில்லையே' என்று எண்ணி எண்ணிப் பலதடவை வீதியில் பார்த்துப் பார்த்துப் பிறது வீதியின்கோடியில் வெகு ஸம்ப்ரமத்தோடு காலிப்பின் வருமவனைக்கண்டு அந்த ஸமயத்தில் உள்ள அவனுடைய அழகில் ஈடுபட்டு மிகவுகந்து மற்றுமங்குள்ள ஜனங்களையும் கூப்பிட்டு ஆச்சர்யமான இவன் வேஷத்தைப் பாருங்களென்றாள். 1

க்ருஹத்திற்கு வந்தவுடனே அவனை வாரி எடுத்து முத்த மிட்டு அவனையும் தனக்கு முத்தந் தரும்படிக் கேட்டாள். அப்போது அவனது கரிய திருமேனி வாடியிருப்பதைப்பார் த்து 'குழந்தையைக் கன்று மேய்க்க அனுப்பித்த என்னின் மனம் வலியாள் ஒரு பெண்ணில்லை' என்று வருந்தினாள். 2

பிறகு ஸ்ரீ நந்தகோபர் குழந்தை வந்ததும் அதனோடு கூடவே உண்ணவேண்டுமென்று காத்திருக்க யசோதை ஸ்ரீ க்ருஷ்ணனை முன்னமே ஸித்தமாக்கப்பட்டிருந்த ஸம்ஹா ரங்களைக்கொண்டு நீராட்டுவித்தாள். 3

அப்போது கற்றுத்தூளி போக ஒவ்வொரு அங்கத்தை யும் நீர்விட்டுக் கைகளால் தடவி கண்களால் அனுபவித்த அவள் அவன் திருவடிகள் வெதும்பியும் திருக்கண்கள் சிவந் தும் திருமேனியே அசைந்தும் இருப்பதைக்கண்டு மனம் கரைந்து 'உனக்கு மிகவும் உகப்பான 'குடையுஞ் செருப்பும்' குழலும் கொள்ளாதே போனாயே என் கண்ணா. அப்படிப் போகலாமோ' என்று ஒரு சிறிய பாடம் கற்பித்தாள். 4

நீராடிய பிறகு ஸ்ரீ க்ருஷ்ணன் ஸ்ரீ நந்தகோபரோடு உண்ணும்போதும் அதன் பிறகும் மற்றும் சில விஷயங்கள் சொன்னாள்.

'சிற்றாடையும் சிறுப்பத்திரமும் இவை கட்டிலின்
மேல்வைத்துப்போய். கற்றாயரோடு நீ கன்றுகள்
மேய்த்துக் கலந்துடன் வந்தாய்போலும்'

இடைவிடாது கண்ணனைப்பற்றி ஊரார் குறைகூறுவர். யசோதை வாத்ஸல்யாதிசயத்தால் அதையெல்லாம் நம்பமாட் டாள். ஆகிலும் இவ்விதப்பழிகள் வராமலிருப்பதன்பொரு ட்டு கண்ணனை மற்றவரோடு சேரவேண்டாமென்பாள்.

'பல்லாயிரவரிவ்வூரிற்பிள்ளைகள் தீமைகள் செய்வார், எல்லாமுன்மேலன்றிப்போகாதெம்பிரான் நீ இங்கேவாராய்'

என்று கூறுவாள். மற்றவர்களோடு கூடினால் அவர்களால் உத்ஸாஹப்படுத்தப்பட்டு மிகவும் அபாயகரமான கார்யத்தையும் தன்குழந்தை பண்ணிவிடும் என்றும் இவள் பயந்திருந்தாள். அதனால் குலதர்மமான கன்று மேய்க்கும் காரியத்தில் அபிநிவிஷ்டனான ஸ்ரீ க்ருஷ்ணனை அந்த விஷயத்தில் தடுக்கமாட்டாது 'தனியே போய்க்கொஞ்சகாலம் கன்று மேய்த்து உடனே க்ருஹத்திற்கு வந்துவிடவேண்டு'மென்று மன்றாடிக் கேட்டுக்கொள்வாள். இப்படி இவள் பலதடவைகள் சிக்ஷித்திருந்தும் ஸ்ரீ க்ருஷ்ணன் இத்திருமொழிக்கு விஷயமான ஒருநாளில் மற்ற இடைப்பிள்ளைகளோடு சேர்ந்து அலைந்து திரிந்து வந்ததாக யசோதைக்குத் தோன்றிற்று. 'அப்பனுமுண்டிலன் உன்னோடுடனே உண்பான்' என்றதால் முன்னமே அவள் குறித்த நாழி தப்பி வந்தான் என்பது ஸூசிதம். 'நீ உகக்கும் குடையும் செருப்பும் குழலும் தருவிக்கக் கொள்ளாதேபோனாய்' என்றதால் மற்றவர்களோடு கூடுவதில் இவனுக்குள்ள தீவ்ராபிலாஷமும் த்வரையும் வ்யஞ்ஜிதம். இதையே மறுபடியும் இங்கே வ்யஞ்ஜிப்பிக்க

சிற்றாடையும் சிறுப்பத்திரமுமிவை கட்டிலின்
மேல் வைத்துப்போய்

என்றாள். இப்படி வெளியேபோவதில் இருந்த த்வரையாலும் திரும்பி வரும்போது ஏற்பட்ட விளம்பத்தாலும் தனக்கேற்பட்ட ஊஹத்தைத் தெரிவிக்கிறாள்

கற்றாயரோடு நீ கன்றுகள் மேய்த்துக் கலந்துடன்
வந்தாய்போலும்

என்று. வந்தாய் போலும் வந்ததாகத் தோன்றுகிறது. வந்ததாக நான் எண்ணுகிறேன். எப்படி வந்ததாக? மற்றப் பிள்ளைகள் கன்று மேய்த்தவிடத்திலேயே மேய்த்து அவர்களோடு சேர்ந்து விளையாடி அவர்கள் வரும்போது அவர்களோடு வந்ததாக.

யசோதைக்குக் கீழ்ச்சொன்ன காரணங்களால் கலந்து வந்ததாக நிச்சயமே ஏற்பட்டிருந்தது. கன்று மேய்க்கப் போனவிடத்தில் ஒரு பயங்கரமான காரியத்தை ஸ்ரீக்ருஷ்ணன் செய்ததாக ஒரு ஸமாசாரமும் யசோதையின் காதுக்கு எட்டியிருந்தது. ஆகிலும் தனது குழந்தையினிடத்தில் எதையும் அழுத்தமாய்ச் சொல்ல அவளுக்கு இயலாது.

இரப்பன் உரப்பகில்லேன்

என்று பெரிய திருமொழியில் இவள் பாசுரம். கண்டிதமாகப்பேசுகிருள் தனது தாயென்று ஸ்ரீக்ருஷ்ணன் எண்ணும்படிப் பேச இவளுக்கியலாது. ஆகையால் 'கலந்துடன் வந்தாய்போலும்' என்று தனது ஊஹமாகவே பேசினுள். கலந்துடன் வந்தாய் என்றவளவே நின்றுல் இவளுக்கு அதில் தீர்மானம் ஏற்பட்டிருப்பதாகவும் அந்தத்தீர்மானத்தைத் தயக்கமில்லாமல் வெளிப்படுத்தக்கூடிய நிலைமையிலிருப்பதாகவும் அதனுல் கோபமே ஓங்கி நிற்பதாகவும் தோற்றமுண்டாகி ப்ரதானமான ப்ரேம ரஸத்திற்குப் பரிபோஷமில்லாதொழியும். இதற்கு நேர் மாருக போலும் என்றிருந்தால் உண்டான எண்ணத்திற்கு நிர்ணயரூபத்வமில்லாமையும் அதனுல் குற்றமுள்ளபோதும் கடிந்து பேச மாட்டாமையும வாத்ஸல்யாதிசயமும தோற்றி ஸ்ரீக்ருஷ்ணனிடத்திலுள்ள ஹாவபந்தத்தைப் பரிபோஷித்துக்காட்டும். ஆகையால் இவ்விடத்தில் ப்ரதானமாய் இருந்து த்வனி என்னும் பெயருக்குரித்தான வ்யங்க்யார்த்தம் இந்த போலும என்ற பதத்தைப் பற்றி நின்றது. இது விவக்ஷிதான்யபர வாச்ய த்வனியில் ஒரு வகையான பதப்ரகாச்ய அநுரணநரூபத்வனியாகும்.

வந்தான்போலும் என்றிருந்தால தோற்றம் வருதலைப் பற்றியதாகும். வந்தது தெரிந்தபிறகு வேகமாய் வந்தான் போலும் என்றுல் தோற்றம் வேகத்தைப் பற்றியதாகும்.

இதற்கும்மேல் மிகவும் வேகமாய் வந்தான் போலும் என்றால் அது மிகுதியைப் பற்றியதாகும். வாக்கியத்தில் விசேஷணங்கள் பல விருந்தால் வீதி கடைசி விசேஷணத்தையே விஷயீகரிக்குமென்பது ஸாமான்ய ந்யாயம்.

ஸர்வத்ராக்யாதஸம்பத்தே ச்ரூயமாணே பதாந்தரே
விதிசக்த்யுபஸங்க்ராந்தே: ஸ்யாத்தாதோரனுவாததா

என்பர் மீமாம்ஸகர்கள். ஆகையால் இங்கே வாக்யவின்யாஸ வைகரியை யநுஸரித்து வந்தாய் போலும் என்று போலும் என்ற பதம் கடைசியில் இருந்தாலும் வந்தது ப்ரத்யக்ஷமாகையால் அதை விஷயீகரிக்காது கற்றுயரோடு என்று தொடங்கி உடன் என்றளவுமுள்ளதை தாத்பர்யகத்யா விஷயீகரித்து நிற்கும். மேலுமிப்படியே உசிதப்படி கண்டு கொள்வது. 5

கலந்துடன் வந்தது மாத்திரமன்று யசோதை ஸ்ரீக்ருஷ்ணனுக்குச் சொல்லக் கருதியது வனத்தில் மற்றப் பிள்ளைகளோடு கலந்து துணிச்சலோடு கொடிய விளையாட்டும் ஏதாவது நடத்தியிருக்கலாம் என்றும் அவள் அறிவிக்கக் கருதினாள். இது அலங்கார சாஸ்திரத்தில் ரஸநிரூபணப்ரகரணத்தில் விவரிக்கப்பட்ட 33 வ்யபிசாரபாவங்களில் ஒன்றான சங்கை என்னும் வ்யபிசாரி பாவம். இது வ்யஞ்ஜநாவ்ருத்தியால் தோன்றி ப்ரதானமான வாத்ஸல்யரஸத்திற்கு அங்கமாகிறது. இக்குறிப்பை யறிந்த ஸ்ரீக்ருஷ்ணன் 'நான் அப்படி துஷ்டத்தனம் செய்வேனா அம்மா! நீ அப்படி ஸந்தேகப்படலாமோ' எனலாம். அதற்காக யசோதை "நீ முன்னொருநாள் பாம்பைப் பிடித்து ஆட்டவில்லையா? அதைக் கேட்டு நான் பட்ட கஷ்டம் யாருக்குத்தெரியும்? பயமொன்றுமில்லையே உனக்கு? சத்ருக்கள் உன் விஷயத்தில் 'எதையோ' விரும்புகிறார்கள், அதற்குத் தகுந்தபடியே நீயும் செய்கிறாயே" என்கிறாள்.

அஞ்சுடராழி உன் கையகத்தேந்து மழகா நீ பொய்கைபுக்கு
நஞ்சுமிழ் நாகத்தினோடு பிணங்கவும் நான் உயிர்வாழ்ந்திருந்தேன்
என்செய்யவென்னை வயிறு மறுக்கினாய் ஏதுமோரச்சமில்லை
கஞ்சன் மனத்துக்குகப்பனவே செய்தாய் காயாம்பூவண்ணங்கொண்டாய்.

இது இறந்தகாலச் செயல். இதில் ஊஹம் ஒன்றுமில்லை. அன்னைக்குத் தெரிந்தவிஷயமென்று ஸ்ரீகிருஷ்ணன் அறியும். ஆதலால் இதைத்தான் உறுதியாகக் கூறும்போது நிஷ்டுரமாம் என்ற சங்கை யசோதைக்கில்லை. ஆகையால் நாகத்தினோடு பிணங்கவும் என்று போலும் சேராதமுறையில் பேசினது. 6

இதைக்கேட்ட ஸ்ரீ கிருஷ்ணன் 'ஏதோ ஒரு தடவை தவறு செய்தேன். மறுபடியும் செய்வேனோ' வென்லாம் என வைத்து இன்னும் ஒரு துணிச்சல் கார்யம் நடந்ததாகத் தோன்றுகிறதே என்கிறாள்.

பண்றியுமாமையும் மீனமுமாகிய பாற்கடல்வண்ணா உன்மேல்
கன்றினுருவாகி மேய்புலத்தே வந்த கள்ளவசுரன் தன்னை
சென்று பிடித்துச் சிறுக் கைகளாலே விளங்காயெறிந்தாய் போலும்.

இங்கு அஸுரனைக் கைகளால் பிடித்து விளங்காயெறிந்தது இவள் ஊஹித்தறிந்ததன்று. பின் யாரோ சொல்லக்கேட்டது. அப்படி நடந்திருக்கலாமோ என்னவோ வென்ற ஸம்பாவனை மாத்திரம் இவளுக்கு. தீர்மானமல்ல. தீர்மானமாய்ச் சொல்ல வல்லளுமல்ல. ஆகையால் போலுமென்றாள். இதுவும் மற்றும் பிறர் சொல்லுக் கேட்டே இவள் அறிந்தாள் என்பது 'இதுமாத்திரமா இன்னும் பல விஷயங்கள்

நடந்ததாக நான் கேட்டேனே' என்ற கருத்துடன்

கேட்டறியாதன கேட்கின்றேன் கேசவா கோவலரிந்திரற்குக் காட்டிய சோறும் கறியும் தயிரும் கலந்துட னுண்டாய்போலும்

என்று இவள் சொன்ன மேல்பாசுரத்தால் ஸ்பஷ்டமாக வ்யஞ்ஜிதமாயிற்று. இவள் வீட்டிலிருந்து கானகத்தில் நடந்ததைப் பிறர் சொல்லக் கேட்கின்றவள். வீட்டில் நடப்பனவெல்லாம் இவள் நேரில் அறிந்து

எண்ணெய்க் குடத்தையுருட்டி இளம்பிள்ளைக் கிள்ளியெழுப்பிக் கண்ணைப்புரட்டி விழித்துக் கழகண்டு செய்யும்பிரானே

இத்யாதி சொல்லுமிடத்துப் போலும் என மாட்டாள். அவ்விடத்திலேயே காட்டில் நடந்தவற்றைக் கேட்டுத் தானறிந்ததாக ஜ்ஞாபிக்கக் கருதியபோது

கன்றினை வாலோலை கட்டிக் கனிகளுதிரவெறிந்து
பின்தொடர்ந் தோடியோர் பாம்பைப் பிடித்துக்கொண்டாட்டினாய் போலும்

என்று போலும் சேர்த்துச்சொல்வாள். இதனால்

கீழையகத்துத் தயிர் கடைகின்றான் போலும்
மரமேறியிருந்தாய் போலும்
நாகத்தினோடு பிணங்கி நீ வந்தாய் போலும்
வம்பவிழ் கானத்து மால்விடையோடு
பிணங்கி நீ வந்தாய் போலும்

இத்யாதி வ்யாக்யாதம். யசோதைபோல் மற்ற ஸ்த்ரீகளும் வீட்டிலிருந்தே கேட்டதை

அங்கொரு பூதவடிவுகொண்டு உன் மகன் இன்று நங்காய்
மாயன் அதனையெல்லாம் முற்ற வாரி வளைத்துண்டிருந்தான் போலும்

என்று சொன்னார்கள். சொல்லும்போது யசோதை கோபி

த்து 'நீங்கள் நேரில் பார்த்தீர்களா ? ஸத்யமாய்ச் சொல்வீர் களா ?' என்று கேட்டால் இவர்கள் 'எங்களுக்கு என்ன தெரியுமம்மா. இப்படிச்சொல்லிக்கொள்ளுகிறார்கள்' என்றே பதில் சொல்லவேண்டியவர்கள். ஆகையால் முன் ஜாக்ரத் தையாக போலும் என்றார்கள். ரஸமயமான ப்ரபந்தத்தில் ஒவ்வொருவர் ஸ்வபாவமும் அப்படியே ப்ரதிபிம்பித்தி ருக்கும். 7, 8

இனி பெரிய திருமொழியில்

எந்தை பெருமானார் மருவிநின்ற ஊர்போலும்
அந்தி மூன்றும் அனலோம்பும் அணிபார் வீதி அழுந்தூரே.

என்றபாசுரத்திலும் இப்படி அத்யந்தம் ரஸவத்தாயிருக்கும் போலும் என்ற சொல். திருவழுந்தூர் விஷயமான நான்கு திருமொழிகளில் இது முதலாவது. இந்நாலுக்கும் ஒரு ஸங் கதி விசேஷம் காணப்படுகின்றது. இரண்டாவது திருவழுந் தூர் சென்று அங்கமலக்கண்ணனைக்கண்டு களித்ததையும் மூன்றாவது அவனடியையடைந்ததையும் நான்காவது அவனே ஸர்வப்ரமாணப்ரஸித்தனை ஸர்வேச்வரன் என்று உலகத் தாரைப்பார்த்து அறுதியிட்டதையும் ப்ரதிபாதிக்கின்றது. திருவழுந்தூர் சென்று சேர்வதற்கு முன்னிருந்த ஒரு நிலையை முதல் திருமொழி ப்ரதிபாதிக்கின்றது. இதில்

என்னைம்புலனும் எழிலுங்கொண்டு இங்கே நெருநெல்லெழுந் தருளி
பொன்னங் கலைகள் மெலிவெய்தப் போன புனிதர் ஊர் போலும்

என்றவித்தால் இதெல்லாம் ஒரு நாயிகையின் பாசுரமென் றும் முதல்நாள் தன்னோடு ஸம்ச்லேஷித்துப்போன புனிதர் இருக்குமிடத்தைத் தேடிச்செல்ல விருப்பமுள்ளவள் அவ

ளென்றும் ஸ்பஷ்டம். இந்த நாயிகை யாரைக் குறித்து இதெல்லாம் சொல்லுகின்றனள் எனில தன்னுடன் இருந்த யாரோ ஒருவரைக் குறித்து என்பது உசிதம். அவள் தோழியோ சேடியோ. அவளைப் பார்த்து நாயிகை 'அழுந்தூர் எம் பெருமானுர் மருவி நின்ற ஊர்போலும்' என்றால் 'அது அவனிருக்கும் ஊர் என்று தோன்றுகிறது' என்று சொன்னதாகிறது. இதனால் இவள்

மண்ணினுள் அவன் சீர் வளம்மிக்கவனூர் வினவி

என்றபடி அவனைச்சேர மிக அவாவுற்று யாரையோ வினவி அவன் அழுந்தூரில் உளன் என்று சொல்லக் கேட்டாளென்றும் அது வாஸ்தவமா என்று தெரிந்துவருமாறு தனது தோழியை யனுப்பும நோக்கத்துடன் இப்படிச் சொல்லுகிருளென்றும், தோழி போய் உண்மையைத் தெரிந்துவந்த பிறகு தான் அங்கு சென்று அவனைக் கண்டு களித்தனள் என்றும் இதெல்லாம் வ்யங்க்யமாய் ரஸத்தைப் பரிபோஷிக்கிறது. போலும் என்பது இல்லையாயின் 'அழுந்தூர் அவன் நின்ற ஊர்' என்று நிச்சயமே தோற்றுமாதலின் விப்ரலம்ப ரஸத்திற்கே இடமிராது.

கண்ணும் சுழன்று பீளையோடு ஈளை வந்தேங்கினல்
பண்ணின் மொழியார் பையநடமினென்னுதமுன்
விண்ணும் மலையும் வேதமும் வேள்வியுமாயினுன்
நண்ணும் நறையூர் நாம் தொழுதுமெழு நெஞ்சமே.

என்று விஷயானுபவத்தில் நிர்வேதமடைந்த ஒரு ஸுக்ருதி எம்பிரானை ஸேவிக்கவெண்ணி அவன் இருக்குமிடம் நறையூர் என்று கேள்விப்பட்டு, காமா முதலில் க்ஷேத்ரத்திற்குச் சென்று பிறகு அவனை ஸேவிக்கவேண்டுமாகையால் க்ஷேத்திரத்திற்கு ப்ராதான்யம் கொடுத்து

அவன் நண்ணும் நறையூர் நாம் தொழுதுமெழு நெஞ்சமே

என்று தத்ஸேவநவிஷயமான நிஜாத்யவஸாயத்தை ப்ரகாசிப்பித்து, மார்க்கத்தில் போகும்போது முன்பு தான் கேள்விப்பட்டதை த்ருடீகரித்துக்கொள்வதற்காகவும் பெருமாளுடையவும் அந்த க்ஷேத்திரத்தினுடையவும் கீர்த்தன ச்ரவணங்களால் ஆனந்தானுபவம் பண்ணுவதற்காகவும் ஸர்வேச்வரன் வஸிக்கும் ஊர் எதுவென்று எதிரே வந்தாரைக் கேட்க

கலங்க முந்நீர் கடைந்து அமுதம் கொண்டிமையோர்
துளங்கல் தீர நல்கு சோதிச் சுடராய
வலங்கை யாழி இடங்கைச் சங்கம் உடையானூர்
(எதுவென்று கேட்கிறீர். சொல்லுகிறோம்)
நலங்கொள் வாய்மை அந்தணர் வாழும் நறையூரே

என்று அவர்கள் சொன்னார்கள். இவ்விடத்தில் முன்மாதிரி விப்ரலம்ப ச்ருங்காரமாகப் பரிணமம் ப்ரக்ருத பக்திரஸத்திற்கு இல்லை. ஸ்வரூபத்தோடே அது இருக்கிறது. தமக்கு நிச்சயமாகத் தெரிந்தவிஷயத்தையே பகவந்நாம ஸங்கீர்த்தனத்தில் தமக்குள்ள பெருங்குதூஹலத்தோடும் பகவத்பரர் விஷயத்தில் இயன்றமட்டில் உபகரிப்பதில் உள்ள ருசியோடும் தெரிவிக்கும் ப்ரகரணம் இது. திருவழுந்தூர் பாசுரத்திலோவென்றால் 'என்னைம்புலனும்' என்ற வித்யாதிபால் ஸூசிதமான நாயிகாபாவத்தை அவலம்பித்து விரஹதசையைப்பற்றிப்பேசப் புகுந்தமையால் போலும் என வேண்டியது ரஸபரிபோஷத்திற்காக அவச்யமாயிற்று.

## III

இவ்வளவால் ஆழ்வார் ஸ்ரீஸூக்திகளில் போலும் என்பது ஓரிடத்திலும் பொருள் குறிக்காது நிற்கவில்லை என்று முடிந்தது. இதனால்

தன்னடியார் திறத்தகத்துத் தாமரையா
ளாகிலும் சிதகுரைக்குமேல்
என்னடியார் அது செய்யார் செய்தாரேல்
நன்றுசெய்தா ரென்பர் போலும்
மன்னுடைய விபீடணற்கா மதிளிலங்கைத்
திசைநோக்கி மலர்க்கண் வைத்த
என்னுடைய திருவரங்கர்க் கன்றியுமற்
றொருவர்க்கு ஆளாவரோ.

112997

என்ற பெரியாழ்வார் ஸ்ரீஸூக்தியிலும் அச்சொல் பொருள் குறித்தே நிற்கிறதென்பது ஸித்தம். அது ஸ்ரீதேசிகன் திருவுள்ளத்தை அநுஸரித்து தத்ப்ரஸாதத்தாலே இனி உபபாதிக்கப்படுகிறது. நாலாப்பத்தில் ஸ்ரீ ரங்கநாதன் விஷயமான கடைசி மூன்று திருவாய்மொழிகளில் முதலிரண்டும் திருவரங்கத்தின் பெருமையை ப்ரதானமாகப் பேசுவன. மூன்றாவதில் ஸ்ரீ ரங்கநாதனிடத்தில் சரணாகதி செய்யப்படுகிறது. இந்த மூன்றுக்குள் நடுவிலிருக்கும் மரவடியின் இரண்டாவது பாட்டு தன்னடியார் என்று கீழ் உதாஹரிக்கப்பட்டது. இந்தப் பாட்டுக்கு இந்தத் திருவாய்மொழியில் ஸங்கதி விளங்குவது கொஞ்சம் ச்ரமம். இது திவ்யதேச ப்ரதானமான திருமொழி

திருமால் கோயில்      ஒளியரங்கமே
அமருமூர்      அணியரங்கமே

என்ற இந்த ரீதி முன்னும் பின்னுமிருக்கிறது இந்த இரண்டாம் பாட்டில் மாத்திரம் அது காணப்பெறவில்லை. திருவரங்கர்க்கன்றி மற்றொருவர்க்காளாவரோ என்பது திருவரங்கத் திருப்பதியின்மேல் விரித்த தமிழில் சேராது. ப்ரக்ரமபங்கமென்ற காவ்யக் குற்றமுளதோ வென சங்கை பிறக்கும்.

இதற்குப் பரிஹாரம் இந்தப் பாட்டுக்கு இவ்விடத்தில் ஸாக்ஷாத் ஸங்கதி இல்லையென்பதே. இதற்கு முந்தியும் பிந்தியும் உள்ள திருமொழிகளில் பத்தே பாட்டுக்கள், அவற்றில் முதல் ஒன்பது ப்ரக்ருதவிஷயத்தை ஒரே ரீதியில் ப்ரதிபாதிப்பனவாகவும் பத்தாவது பலச்ருதியாயுமிருக்கும். இத்திருமொழியில் பதினொரு பாட்டுக்கள், இவற்றில் இந்த இரண்டாவதை மாத்திரம் விட்டுப்பார்த்தால் எல்லாம் முந்திய பிந்திய திருமொழி மாதிரியே அமைந்திருக்கும். இதனாலும் இந்தப்பாட்டு ஸாக்ஷாத் ஸங்கதமாகாமல் வேறுவிதமாய் ஸங்கதமாகிறதென்பது தோற்றும்.

இப்ரகரணத்தில் முதலில் பெருமாளுடைய பெருமையை வர்ணித்துப் பிறகு திருவரங்கத்தின் விசேஷத்தைக் காட்டி அவ்விதனான அவனுடைய ஊர் இத்தகைய திருவரங்கமெனப்படுகிறது. இப்படி இத்திருமொழியின் முதல் பாசுரத்தில் 'மரவடியைத் தம்பிக்கு வான்பணயம் வைத்துப்போய்'என்று ராமாவதாரத்திலுள்ள சிறப்பை எடுத்துக் கூறினார். கூறவே இவ்வவதாரத்திலே நிரூபிதமான, எல்லோரும் பெருமானை ஆச்ரயிக்கலாமென்று தேறி நிற்றலுக்குத் தகுந்ததான ஒரு பெருங்குணத்தை ஸமரித்து அதை இங்கே காட்டப்புகுந்தார்.

'இவ்வளவு பெருமையுள்ள எம்பெருமான் எழுந்தருளியிருக்குமிடம் திருவரங்கம். அவ்விடம் சென்று அவனடியைச்சேர்ந்து உய்யவேணும் என்கிறீர். இத்தனை காலம் நாம் விபரீதாசரணமே பண்ணிப் போந்தோம். இப்பொழுது நீயே தஞ்சம் என்று அணுகிய நம்மை அவன் ஏற்றாலும் பிறகு பூர்வவாஸனையால் மறுபடியும் விபரீதாசரணம் நேருமேல் அவன் கைவிடானோ, என ஒரு சங்கை பிறந்ததாக வைத்து எக்காரணத்தாலும் கைவிடான் என்று ஸாபிநிவேசமாக அதற்குப் பதில் கூறும் நோக்கத்துடன் அருளிச்

செய்கிருர் தன்னடியார் திறத்தகத்து இத்யாதி.

"தன்னை ஆச்ரயித்தவர்கள் விஷயத்தில் ஸாக்ஷாத் லக்ஷ்மியே தோஷம் கூறினாலும் அவன் அவர்களைக் கைவிடமாட்டான், கூறினவர்களுக்குப் பதில் சொல்வான். தோஷத்தை அங்கீகரியாமலே அது அவர்கள் செய்யமாட்டார் என்பான். அதற்குமேலும் நிர்ப்பந்தித்து தோஷத்தைக் கூறினால் கொஞ்சம் கோபங்காட்டி 'ஸரி. செய்தாரா. நன்றே செய்தார்' என்று சொன்னாலும் சொல்வன். ஆனால் ஆச்ரிதனைக் கைவிடான். இதை விபீஷணன் சரணம் புகுந்த ஸமயத்தில் ஸுக்ரீவனும் மற்றவர்களும் சொன்ன தோஷத்தை எல்லாம் சிறிதும் கவனியாது அபயங்கொடுத்துச் சேர்த்துக் கொண்டவிடத்தில் விசதமாகக் காண்கின்றோம் அப்பொழுது அவனைச் சேர்த்துக் கொண்டு லங்காராஜ்யம் கொடுத்தது மாத்திரமின்றி இன்றைக்கும் அவனிருக்கும் திசையையே நோக்கி சயனித்திருக்கின்றான் எம்பெருமான். இவனோ அடியாரைக் கைவிடுகிறவன்? இப்படி வத்ஸலனும் ஸத்ய ஸங்கல்பனுமிருக்கும் இவனை விட்டு மற்றொருவரை விவேகிகள் ஆச்ரயிப்பரோ" என்கிருர் இவ்விடத்தில் பெரியாழ்வார். இதனால் கீழ்ச் சொன்ன சங்கை அஸ்தான சங்கை. ஆகையால் அதைவிட்டு த்ருடாத்யவஸாயத்தோடு திருவரங்கம் சென்று எம்பெருமானை அடைந்து உய்யவேணுமென்று கீழும்மேலும் வரும் பாசுரங்களோடு சேர்த்து அவைகளின் சேஷமாக இந்தப் பாசுரத்தை அந்வயிக்க வேணுமென்றதாயிற்று.

இனி அஜ்ஞாத நிக்ரஹையாய் ஷஜநயவி ஊதா தஷவி ந: என்றபடி ஜகந்மாதாவான பிராட்டி ஒருசேதனனைப்பற்றி குறை கூறுமோவெனில் கூறவே கூருது. இது வெறுங்கல்பனை, ஷமஷ்ஜவிாவாஜிவ விஷம் என்றாப்போல்.

ஸுக்ரீவாதிகள் சொன்ன தோஷத்தை எம்பெருமான் அங்கீ கரிக்கவில்லை. இன்னும் அதிக வால்லப்யமுள்ளவர்கள் சொன்னால் ஒருஸமயம் அங்கீகரிக்குமோ என்று ஸந்தேகப் படவேண்டாம். வல்லபதமையான பெரிய பிராட்டியே தனது ஸ்வபாவத்தை மாற்றிக்கொண்டு சொன்னாலும் அங்கீகரி யான் என்று ஸத்யஸங்கல்பத்வாதிகளைச் சிறப்பித்துக் காட்ட இக்கல்பனை வந்தது. உரைக்குமேல் இதுவரையில் உரைத்ததாக எங்கும் யாம் கேட்டதில்லை. அப்படி உரைப் பதாக வைத்துக்கொண்டாலும் என்று கருத்து. இப்படி ஆரோபிதமாகக்கூட பிராட்டி தோஷம் கூறும் என்பதை ஸஹியாத பெரியோர் எம்பெருமானுடைய திருவுள்ளத்தை அறிவதற்காக இவ்வாறு உரைக்குமென்றார்கள்.

## IV

என்பர்போலும் என்று சொல்வர் எனத்தோன்று கிறது. என்னென்று சொல்வர் எனத் தோன்றுகிறது.

என்னடியார் அதுசெய்யார். செய்தாரேல் நன்று செய்தார். என்று சொல்வர் என. 'இப்படிச் சொல்வர்' என்று ஒருவர் சொன்னதைக் கேட்டு இன்னும் நிச்சயமேற்படாமல் சொல் லும் வார்த்தை யன்று இது. பின் விபீஷண வ்ருத்தாந்தத் தால் நிச்சயிக்கப்பட்ட விஷயத்தையே மிக உறுதியாகச் சொல்வது. அப்படி இருக்கத்தோற்றம் எந்த விஷயத்தைப் பற்றியது, எவ்விதமானது என்று ஆராயவேணும். 'அது செய்யார்' என்னுமிடத்தில் சாஸ்த்ரங்களால் நிஷேதிக்கப் பட்ட விபரீதாசரணத்தைச் செய்யார் என்று அர்த்தம் என் பது ஸ்பஷ்டம். ஆகையால் இங்கே தோன்றுகிறதென்பதற்கு விஷயமொன்றுமில்லை. 'செய்தாரேல்' என்பது அங்கீகரித்துப் பேசும் பேச்சாகையால் அதுவும் விஷயமன்று. 'நன்று செய் தார்' என்றவிடத்தில் செய்தது அங்கீகரிக்கப்பட்டபடியால்

அதுவும் விஷயமாகாது. மிகுந்தது 'நன்று' என்பதுதான். 'அது செய்தாரேல் நன்று செய்தார்', என்றவிடத்தில் அது நன்று என்றதாக முடிகிறது. அது என்பது நிஷித்தம் விபரீதாசரணம். இது வாஸ்தவத்தில் நன்றன்று. ஆகையால் தோற்றத்திற்கு விஷயமாகலாம். 'அது நன்று போலும்' என்றால் போலும் என்பதால் உத்ப்ரேக்ஷையும் அதனால் உண்மையில் அது நன்றன்றென்றும் தோன்றுமென்பதில் ஸந்தேகமில்லை. 'நன்று செய்தார் போலும்' என்றபோதும் அப்படியே. ஏதோ ஒன்று செய்தார் என வைத்து அவர் செய்தது நன்றுபோலும் என்ற பொருளிலேயே 'நன்று செய்தார் போலும்' என்றது. செய்தார் போலும் என்றுமாத்திரம் இருக்குமாகில் செய்யாதவரைக் குறித்து இது சொன்னதாக ஆகும். 'நன்று செய்தார் போலும்' என்றிருக்கும்போது ஏதோ ஒன்று செய்தார். ஆனால் அது நல்லதன்று என்று வைத்து இதுசொன்னதாக ஆகும்–'நன்றுசெய்தார் போலும்- பெருமை பாராட்டுகிறார்—என்று.

க்ருதோபகாரேவ ரதிர்பபூவ ।

உபகாரம் செய்யப்பெற்றவள் போல் (செய்யப்பெற்ற உபகாரமுடையவள் போல்) ஆனாள், என்றவிடத்தில் அபகாரத்தில் உபகாரமாக உத்ப்ரேக்ஷை. 'அவளுக்குச்செய்யப்பட்டது உபகாரம்போலும்' எனவேண்டிய ஸ்தானத்திலேயே அவள் உபகாரம் செய்யப்பெற்றாள் போலும் எனப்பட்டது.

வக்த்ரம் வியர்வப்யப்யிதும் வயோர்யோ:
ஸங்கேதயச்ரோணாங்கமணிம் கியந்தி ।

என்ற லோத்ப்ரேக்ஷையின் உதாஹரண ச்லோகத்தில்

அயம் விஸ்ருஷ்டஃ பயோர்யோர்வக்த்ரம் வயப்யயிதும்
வர்ணாங்கமணிம் ஸம்ஸ்க்ருதாஸம் கியந்தி ஜோகேஃசத்வா
அவபிலிதாமி வ்யாம்ஸி ஜோஷ்ப்தி ஸங்கே

என்று அன்வயத்தைக் காட்டினார்கள். உத்ப்ரேக்ஷாஶாஸ்த்ர வ்யாகரணத்தில்

> ஹேதுவிஶிஷ்டஸாத்யோத்ப்ரேக்ஷாயா ஸ்வரூபத:
> ப்ரதீதாவபி விவக்ஷாபேதேந ஹேதூத்ப்ரேக்ஷா
> தோ பேதேநைவ வ்யவச்சேத: யதா தத்நா ஜுஹோதீத்யத்ர
> தத்விஶிஷ்டஹோமப்ரதீதாவபி விவக்ஷிதவிதேயத்வேந
> ஹோமோத்தேஶ தத்விதிகவ்யவச்சேத: ।

என்றுஞ் சொன்னார்கள்.

க்ஷேபிதாவகாரேவ என்றவிடத்திலும் க்ஷேபிதாவகாரா வஹந்தேவ என்றிப்படி ஒரு வ்யாக்யாதா அன்வயம் காட்டினார். இதுவே வாக்யந்யாயாநுக்ருஹீதமான பக்ஷம். ஸௌகர்யத்தை விரும்பி மற்றவர்கள் இந்த ஸூக்ஷ்மவிஷயத்தை உபேக்ஷித்தார்கள்.

இனி ஒருவருடைய தாக்ஷிண்யத்தையோ அவிவேகத்தையோ காட்டப் புகுந்து 'இவர் ஒருவன் களவாடினாலும் கொலை செய்தாலும் நன்று செய்தான் என்பர் போலும்' என்றவிடத்தில் அது நன்றன்று, ஆகையால் நன்று செய்தானென மாட்டார் என வைத்து 'அது இவருக்கு நன்று போலும். ஆகையால் இவர் நன்று செய்தானென்பர்போலும்' என்று உத்ப்ரேக்ஷாகர்ப்பமான உத்ப்ரேக்ஷை பண்ணினதாக ஆகின்றது இவ்வித ஸ்தலங்களில் போலும என்பது இல்லாமலிருந்தாலும் வருவித்து கம்யோத்ப்ரேக்ஷை எனக் கொள்வர்,

நன்று செய்தார்போலும என்றவிடத்தில் ஒரே உத்ப்ரேக்ஷை. அது நன்றல்லாததை நன்றெனக் கொண்டது. நன்று செய்தாரென்பர் போலுமென்றவிடத்தில் முதலில் நன்று செய்தாரென மாட்டாதவரை நன்று செய்தாரென்பாராகக் கொள்ளும் உத்ப்ரேக்ஷை போலும் என்று எடுத்

தாண்ட சொல்லாலும் பிறகு அதிலிருந்து நன்றல்லாததை நன்றெனக்கொள்ளும் உத்ப்ரேக்ஷை ஆக்ஷேபத்தாலும் ஆக இரண்டு உத்ப்ரேக்ஷைகள் தோன்றுகின்றன வென்பதைக் குறிக்கொள்ளவேணும்.*

ப்ரக்ருதத்தில் இப்படி வாச்யோத்ப்ரேக்ஷை கம்யோத்ப்ரேக்ஷை இரண்டுமிருக்கின்றன. இவைகளால் பெருமாளுடைய காஷ்டாப்ராப்தமான அதாவது இதற்குமேல் இருக்க முடியாது எனத் தகுந்ததான வாத்ஸல்யம வ்யஞ்ஜிக்கப்படுகின்றது. இதை

வாத்ஸல்ய காஷ்டையாவது அந்தரங்கராய் இருப்பார்க்கு ஆச்ரய (ரித) விஷயத்தில் ஆயிரங்கோடி குற்றங்காணிலும் அநாதரம் பிறப்பிக்க வொண்ணு திருக்கை.

என்று முனிவாஹநபோகத்தில் விசதமாக்கினர்.

இவ்வளவால் இந்தப்பாசுரத்தில் ரஸம் முழுவதும் போலுமென்ற சொல்லைப் பற்றி நிற்கிறதென்பது நிரூபிதமாயிற்று. போலும் என்பதைவிட்டுப் பார்த்தால் நன்று செய்தார் என்பர் என்பதால் 'நிஷித்தாசரணம் மற்றவர்கள் விஷயத்தில் குற்றம்; பாபம். அடியார் விஷயத்தில் குற்றமன்று பின் குணமே, நிஷேதம் மற்றவர் விஷயம், இவ்வித நிஷித்தங்களும் விஹிதங்கள் போலவே அடியார் விஷயத்தில் தர்மங்களே என்று வஸ்து வ்ருத்தியில் அதாவது உண்மையாகவே சாஸ்த்ரார்த்தம என்று முடியுமாதலால் அடியார்கள் நிஷித்தானுஷ்டானம் பண்ணும்போதும் பெருமாள் சீற்றங்கொள்ள ப்ரஸக்தியேயறும். அப்போது தாமரையாளாகிலும சிது

* ரொம்ப ஸூக்ஷ்மமாகக்கவனித்தால் இவ்விடத்திலும் நன்றல்லாததை நன்றெனக் கொள்கிற ஒரே உத்ப்ரேக்ஷை என்பது தோன்றும்.

குறைக்குமேல் என்ற கல்பனை எதற்கு? அது சேருவதுதான். எப்படி? என்னடியார் அது செய்யார் என்பதும் பொருந்தாது தன்னடியார் திறத்தகத்துத் தாமரையாளாகிலும்'குண'முறைக்கு மேல்
என்னடியா ரதுசெய்யார் செய்தாரேல் நன்றுசெய்தார் என்பர் என்பது பெரியோர் பாசுரமாய் இருக்க முடியாது, 'அல்லாதார்திறத்து அதர்மமாயுள்ளவைகளை அடியார் திறத்துத்தர்மமாகக்கொண்டுகக்கும் திருவரங்கர்க்கன்றி மற்றவர்க்காளாவரே' என்றிவ்வளவே அப்போது சொல்லவேண்டுவது. அடியார் செய்யும் குற்றம் பகவானுக்கு மாத்திரம் குணமாகின்றது. மற்றவர் அதை தோஷமாகவே கருதுவர். ஆகையால் 'குணமுறைக்குமேல்' என்று கூற அவகாசமேது எனில் அப்படியே அவகாசமில்லை யென்ருகுக சிதகுரைக்கக்கேட்ட பகவர்ன் 'என்னடியார் அதுசெய்யார்' என்று கூறுவது எப்படி பொருந்தும். குணத்தைச் செய்யார் என்பது பொருந்துமா? ஆகையால் இப்பாசுரமாகிற ரம்யதம ப்ராஸாதத்திறகு அத்யந்த ப்ரகாச ஹேதுவான அநர்க்கமணிதீபம் இந்த ஒப்பிலிப் போலி. இதனல் ஒரு உத்ப்ரேக்ஷை தோன்றும். அதிலிருந்து அடியார் செய்த குற்றம் குணம்போலும் என்று இன்னொரு உத்ப்ரேக்ஷை தோன்றும். இந்த உத்ப்ரேக்ஷைக்கு நிமித்தம குணதர்ம ஸம்பந்தம். அதாவது குணமபோன்றிருக்கை, குணஸாத்ருச்யம், அடியார் செய்யும் விஹித தர்மங்களெல்லாம் அந்தமில்பேரின்பத்தடியரோடிருப்பதாகிற மோக்ஷ ஸாம்ராஜ்யத்திற்கு ப்ரதிபந்தகங்களாயிரா. இவர்கள் செய்யும் குற்றங்களும் அதற்கு ப்ரதிபந்தங்களாக மாட்டா. இதுவே நன்று போலும் என்ற உத்ப்ரேக்ஷைக்கு நிமித்தம. நிஷித்தானுஷ்டானம ஏன் ப்ரதிபந்தகமாகாதெனில் அபுத்தி பூர்வமாக இதுநேர்ந்தால் இதைப் பெருமாள் தானே க்ஷமித்து விடும். புத்தி பூர்வமாகிலும் உசித ப்ராயச்சித்தங்களைப்

பண்ணுவித்தும் அது இல்லாதபோது சில சிக்ஷைகளைப் பண்ணியும் அகற்றும் இப்படி இது கழியுமாகையால் மோக்ஷ ப்ரதிபந்தகமாகாது. இவ்வித உத்ப்ரேக்ஷாநிமித்தம் தோன்றினவாறே அதற்கு ஹேதுவான எம்பெருமானுக்கு அடியார்களிடத்திலுள்ள வாத்ஸல்யாதிசயமும் அதிலிருந்து அவன் எவ்விதத்திலும் அடியார்களைக் கைவிடான் என்பதும் தோன்றி ப்ரக்ருத பக்திரஸத்தில் முடியும்.

## V

இதை யெல்லாம் ஸ்ரீதேசிகன்

> இங்கு செய்தாரேல் நன்று செய்தா ரென்றதுக்கு ப்ராமாதிக மாகப்புகுந்தால் நாமே க்ஷமிப்புதோம். புத்தி பூர்வமாகப் புகுந்தால் அவர்கள் க்ஷமை கொள்ளாதவளவிலும் சிக்ஷா விசேஷங்களாலே சமிப்புதோம், ஒரு படிக்கும் கைவிடோம் என்று தாத்பர்யம். நன்று செய்தார் என்பர் போலும் என்று சொல்லுகையாலே இது வஸ்து வ்ருத்தியில் நன்றன்று என்னுமிடம் ஸூசிதம்.

என்ற ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸார ஸ்ரீஸூக்தியால் விளங்க வைத்தார்.

இது ஸித்தாந்தமாகில் கத்யவ்யாக்யானத்தில் ஸ்ரீச்ருத ப்ரகாசிகாசார்யர் வாத்ஸல்யத்தை தொஷெஷு மூணத்வ பைூஸிஃ என்றது விரோதிக்குமென்ற சங்கைக்கு இடமில்லை. ச்ருதப்ரகாசிகையில் அந்தரதிகரணத்தில் "வாத்ஸல்யம் தோஷாநாதரஹேது; ஸ்நேஹ: யதா மாது: புத்ரே" என்று ஸாதித்திருப்பதால் தோஷாதர்சித்வம் வாத்ஸல்யம் என்பது ஸ்ரீச்ருதப்ரகாசிகாசார்யருக்கு ஸம்மதமென்பது ஸ்பஷ்டம்,

இவர் தாமே ஜிஜ்ஞாஸாதிகரணக்கடைசியில் ஸ்நேஹத்தின் விளைவாக

அஸ்தான பயசங்கை தோஷாநவபாஸம்

தோஷத்தில் குணபுத்தி

என்று இவற்றைக் கூறி அங்கரதிகரணத்தில்

அபாரகாருண்ய ஸௌசீல்ய வாத்ஸல்யௌதார்யைச்வர்ய ஜலநிதிம்

என்று பெருமாளுக்கு பாஷ்யகாரர் இட்ட விசேஷணத்தில் உள்ள வாத்ஸல்யத்தை கீழ்ச் சொன்னபடி தோஷாநாதர ஹேது ஸ்நேஹம் என்று ஸாதித்திருப்பதால் அஸ்தானபய சங்கை தோஷத்தில் குணபுத்தி என்றவிவை யெல்லாம் பெருமாள் தவிர மற்றவர்களுக்கே தவிர பெருமாளுக்கில்லை என்று அவர் கருத்தென்பது ஸ்பஷ்டமாகிறது. ஆனால் இதற்கு விருத்தமாக கத்யபாஷ்யத்தில் ஸாதித்தது ஏன் என்னில் இது அதிவாதமென்று ஸ்ரீ தேசிகன் ஸமர்த்தித்தார். அதிவாதமாவது ப்ரசம்ஸைக்காகப் ப்ரவ்ருத்தமான அதிசயோக்தி. தோஷத்தை தோஷமாகப் பாராமல் இருப்பதே அதை குணமாகப் பார்ப்பதாக உபசரித்துச் சொல்லப்பட்டது. துக்க நிவ்ருத்தியே ஸுகம் என்பதுபோல். கத்யபாஷ்யத்தில் ஸாதித்ததை முக்யமாகக்கொண்டு ச்ருதப்ரகாசிகாலக்ஷணத்தை ஔபசாரிகமாக்கக் கூடாதோவெனில் கூடாது. ததாஹி.

இயம் தோஷே குணபுத்திஃ

ஸர்வஜ்ஞோ பகவாந் ஜ்ஞாநீ ப்ரேக்ஷதே வத்ஸலஃ கதம் ।

ந தத்தீயஃ ப்ரகாரோऽஸ்தி வாத்ஸல்யம் கிம் நிரர்த்தகம் ॥

தோஷத்தை குணமாகப்பார்ப்பது என்பது ஒன்றை மற்றொன்றாகக் கொள்வது என்ற ப்ரமமேயாம். இவ்வித ப்ரமம் ஈச்வரன் பக்கல் இல்லை. உண்மையில் அது குணமேயென்னில் தோஷத்தை குணமாகப் பார்ப்பது என்றது

கூடாது. குணத்தையே குணமாகப் பார்ப்பதன்றோ அது. குணத்தை குணமாகப் பார்ப்பது வெறும் ஜ்ஞானமேயன்றி வாத்ஸல்யமன்று. மற்றவர் விஷயத்தில் தோஷமாய் இருப்பதை அடியாரிடத்தில் குணமாகப்பார்ப்பது என்னில் இதனால் விசேஷமொன்றுமில்லை. அடியார் விஷயத்தில் அவனது வாத்ஸல்யத்தை நிரூபிக்கவேண்டும். அடியார் செய்வதெல்லாம் குணமாகில் அவர்கள் செய்யும் அக்நிஹோத்ராதிகளையிட்டு எப்படி வாத்ஸல்யத்தை நிரூபிக்க முடியாதோ அப்படியே அவர்கள் செய்யும் அந்ருத பாஷணம் அபக்ஷ்ய பக்ஷணம் இவை முதலானவைகளையிட்டும் வாத்ஸல்யத்தை நிரூபிக்கமுடியாது. இவைகளும் குணங்களே யாதலின். ஆகவே இங்கு பூர்வாசாரியர்கள் எல்லோரும் ஏககண்டர். விப்ரதிபத்தியேயில்லை.*

---

* "போலும், 'ஓங்காண்போ' என்றாப்போலே உதாஸீநோக்தி" என்றிங்கு பெரியவாச்சான் பிள்ளையின் உரை ஸ்ரீஸூக்தி. "என்பர்போலும் என்றாப் போலே சில உதாஸீநோக்திகளை" என்று அதை அனுஸரித்த பதவுரை இவற்றால் உலகத்தில் பிறர் சொன்னதை அங்கீகரியாமலே 'ஆமாம்போ' என்று சொல்வது போன்றது இங்கு 'நன்று செய்தார்' என்ற பெருமாள் வார்த்தை என்பது போலு மென்ற வித்தால் கிடைக்கின்றதென்று உரைகாரர்களின் கருத்தென்பது ஸ்பஷ்டம்.

"நீ இப்போது செய்கிற தீம்பால் அவையும் செய்தாயாக நான் கேட்டதும் கூடுமிறே" என்ற பின் து(தொ)டர்ந்தோடியோர் பாம்பைப் பிடித்துக்கொண்டாட்டினாய் போலும் என்றவிடத்திலுள்ள பெரியவாச்சான் பிள்ளை வ்யாக்யான ஸ்ரீஸூக்தியால் அங்கும் போலும் என்பதற்கு அர்த்தமுண்டென்றே அவர் திருவுள்ளமென்பதும் அவ்வர்த்தம் நாம் இங்கு கீழ் நிரூபித்தபடியே என்பதும் ஸ்பஷ்டம்.

வாக்கிய நீதியெலாம் வண்மைபெறும் வேங்கடவன்
ஆக்கிய மெய்நூ லகத்து.

இரண்டாவது பாகம் முற்றிற்று.

---

தாயினும் பாசம் மிக்கச் சாத்திரம் வகுத்த மார்க்கம்
போயின பெரியோர் பாத பதுமமே பணிந்தாங் கன்னோர்
வாயினிற் கேட்ட சொற்கள் ஒலியறு நின்ற காதன்
நாயினும் நீசன் நேர்ந்தான் நாதனின் தகவாலீதே.

கோதை – போலும் முற்றிற்று.

---

## திருத்தம்

| பக்கம். | வரி. | |
|---|---|---|
| IV | 4 | ஆளாவரே |
| ,, | 5 | 4, 9, 2. |
| 4 | 18 | அகல |
| 5 | 26 | பிங்கள |
| 23 | 25 | முதல் முதலில் |
| 25 | 8 | ஆளாவரே |
| 26 | 19 | ஸ்மரித்து |
| 28 | 1 | சொன்ன |

---

ஸ்ரீ:

# வைதிகபத ஸேவை.

[அனுபந்தம்]

---

இனி ஸம்ஸ்க்ருத வேதத்தைப் பற்றிய ஒரு சிறு விமர்சம் இங்கு அனுபந்த முறையில் சேர்க்கப்படுகின்றது.

1 ஊரு ஷ்வு ஃரெநு ஹ்யரேஷு ஷு வெதவொ வுரு வஃ
ஷொரா உவரா ரூவாமரூ:

என்றவிடத்தில் கடைசிபதமான உவாமரு: என்றதை உவ ஸுமரூ: என்று பதகாரர் பிரித்திருக்கிறார். இங்கு உவ ஈமரூ: என்று ஏன் பிரிக்கக்கூடாது? ஸுமரூ: என்று ஸுஜ என்ற உபஸர்க்கம் இருப்பதாக வைத்து அதைச் சேர்த்துப் பிரித்திருப்பதற்குக் காரணமென்ன? என்று விசாரம்.

2 இதில் பூர்வபக்ஷம் பின்வருமாறு:- ஈமரூ: என்று பிரிக்கும்போது அகாரத்தை உதாத்தமாகக்கொள்வதா? அனுதாத்தமாகக் கொள்வதா? அனுதாத்தம் என்ற இரண்டாம் பக்ஷம் கூடாது. ஏனெனில் அப்போது ஸம்ஹிதாகாலத்தில் உவாமரூ: என்றவிதில் முதலெழுத்தான உகாரம் உதாத்தமாயும் வா என்பது ஸ்வரிதமாயும் இருக்கவேண்டும் உவாமரூ: என்று. அப்படி இருக்கவில்லை. உகாரம் அநுதாத்தமாயும் வா உதாத்தமாயுமிருக்கிறது. உவாமரூ: என்று. இவ்வாறு ஸம்ஹிதையிலுள்ள ஸ்வரம் எப்படிப்பொருந்துமோ அப்படிப் பிரிக்கவேண்டுமாகையால் அனுதாத்தம் என்ற இரண்டாம் பக்ஷம் கூடாது. இனி உதாத்தமென்ற முதல் பக்ஷம் கூடுமோவென்றால் அதுவும் கூடாது. உதாத்

10

தஸ்வரம் வருவதற்குள்ள ஹேதுக்களில் ஒன்றும் இங்கில்லையாதலின். யசு என்ற சப்தம் ஹிகாரம் முதலியதிருந்தால் ஊமஃ என்றபதத்திலுள்ள ஊகாரம் உதாத்தமாகலாம், அவற்றிலொன்றுமிங்கில்லை. ஆகவே அது அனுதாத்தமாகவே இருந்து தீரவேணும். இப்படியாகில் உதாத்தம் என்ற முதல் பக்ஷம் சேராதென்பது ஸ்பஷ்டம். இப்படி இரண்டுபடியாகவும் ஊமஃ என்று பிரிக்கமுடியாதாகையால் ஆ உவ ஸர்க்கத்தைச் சேர்த்து ஆமஃ என்று பதகாரர் பிரித்தார். ஊமஃஎன்ற அகாரம் அனுதாத்தமாயினும் உதாத்தமான ஆஉவஸர்க்கத்துடன் ஸந்தி வரும்போது அது தனியே ச்ரவிக்காமல் ஏகாதேசமான உதாத்த தீர்க்கத்தில் அடங்கி விடுகிறது. ஆ உவஸர்க்கம் பரமாய் இருப்பதால் உவ என்ற உபஸர்க்கம் அனுதாத்தமாய்விடுகிறது, ஆகவே ஸம்ஹிதா ஸ்வரம் உபபந்நமாகிறது.

3. இங்கு பிறருடைய உபபாதநம் வேறு விதமாயிருக்கின்றது, 'ஊமஃ' அல்ல, ஆமஃ தான்' என்ற நிர்த்தாரணம் ஸ்வரத்தினுல் முடியாது, ஏனெனில் ஸ்வரம் இரண்டுக்கும் பொது. அதனுல் யொ ஹி வூாவிதயில்லாத விடத்திலுள்ள ஸமாஸம உவாமஃ என்ற விடத்தில் ஸோஹ்ஷி என்ற விடத்தில்போல் ஆ என்ற உவஸமஃம் உண்டென்பதை ஸ்பஷ்டமாகக் காட்டுகின்றது என்பது அவர்கள் செய்யும் உபபாதநம். இது யுக்தமன்று. ஸ்வரம் ஊமஃ ஆமஃ என்ற இரண்டுக்கும் பொது என்பதுபோல் ஸமாஸமும் பொது எனலாம். இல்லாவிட்டால் இங்கு ஊமஃ வா ஆமஃ வா என்ற விமர்சத்திற்கு ப்ரஸக்தி ஏது? இனி யொ ஹி வூாவித இல்லாதவிடத்திலுள்ள ஸமாஸம் இது. ஆகையால் நடுவில் ஒரு உபஸர்க்கம இருக்கவேண்டுமென்று நிச்சயிக்கிறேம் என்னில், இவ்விசேஷணத்தை ஸ்வரவிசேஷ

த்திற்கேயிட்டு இதை உபாதிக்கலாம்:- பொ ஹி ஹ்ரா வி யில்லாதவிடத்து ஸ்வரவிசேஷமிருப்பதால் மத்யே ஒரு உபஸர்க்கம் இருக்கவேணும் என்று. மேலும் இங்கு ஸமாஸமுண்டென்பதை எப்படித் தெரிந்துகொள்வது. ஸ்வரத்தாலேயே, அதனாலேயே மற்றோர் உபஸர்க்கமிருப்பதும் தெரியக்கூடியதாயிருக்க இதற்குத் துல்யமான ஸமாஸத்தை இதற்கு ப்ரமாணமாக்குவது யுக்தமன்று. தமேஜ தொரெவ தமெஜ தாகெவ உயெ கிம் தெந

இன்னொரு விசேஷத்தை இங்கு கவனிக்கவேணும். ஸஉ ஹதி இத்யாதி ஸ்தலங்களில் ஸமாஸம் இருந்தே ஆகவேணுமென்ற நியமமில்லை. முதிம ட களை திஜிவொடா தவதி என்ற ஸூத்ரங்களால் உபஸர்க்கத்திற்கு அநுதாத்தஸ்வரம் விதிக்கப்பட்டதேயன்றி ஸமாஸம் விதிக்கப்படவில்லை. வார்த்திககாரர்தான் இவ்விடத்தில் ஸமாஸத்தைச் சொன்னார். இதையும் மஹாபாஷ்யகாரர் அநித்யமென்றார். உதாஹரணம் உ நீ நா ஹ்ரா ரீண்யம், ஆனபடியால் மஹாபாஷ்யகாரர் சொன்னதுதான் ப்ரமாணம். இது ப்ரௌடமநோரமையில் ஸ்பஷ்டமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பதகாரர் ஒரு பதமாகப் படித்திருப்பதைக் கொண்டு இங்கு ஸமாஸம் என்று கருதினர். ஹ்ரஜாவதிம் கொவெடி ஹ்ரஜாவதிம் வெடி என்றவிடத்தில் கொவெடி வெடி என்று தனிப்பதங்களையே ஒன்றாகச் சேர்த்து வேஷ்டகம் செய்யப்படுகின்றது. இங்கு ஸமாஸத்தைக் கல்பிப்பது மிகவுமநுசிதமென்பது ஸ்பஷ்டம். யஷவைத்தின் ஏகவசநாதேசமான கூ என்ற இதைக்காட்டிலும் இது வேறு. அநுதாத்த ஸ்வரமுள்ளது. என்ற இவ்விஷயத்தைத் தெளிவாகக் காட்டுவதற்காகவே இவ்விடத்தில் கூஶூஷத்தை க்ரியாபதத்தோடு சேர்த்துப்

பதகாரர் படித்தார். உண்மையில் அவை வெவ்வேறு பதங்களே. அதுபோல் ஸம் ஶ்ரூ ஹஸ்தி என்ற தனிப்பதங்களையே ஒன்ருகச் சேர்த்துப் படித்தார் என்னலாம். இவ்வித பத ஸமுதாயத்திற்கு ப்ராதிசாக்யத்தில் இங்க்யம் என்று வ்யவஹாரம். நாநாவதஃ இங்க்யம் இத்யாதிஸூத்ரம். ஆகவே இம் மாதிரி ஸ்தலங்களில் ஸமாஸமிருப்பதாக வைத்துச் செய்யும் விமர்சமெல்லாம் அஸித்திவிஷ்டமாகலாம்.

இப்படிப் பிறர் செய்யும் உபபாதநம் உபபந்நமாகாமையால் வேறு விதமாக பூர்வபக்ஷம் உபபாதிக்கப்பட்டதென்று காண்க.

4. இதன்மேல் நாம் ஸித்தாந்தமாகச் சொல்வதாவது: அகாரத்தை உதாத்தமாகக் கொண்டே அமா: என்று பிரிக்கலாம். உதாத்தஸ்வர ஹேதுக்களில் ஒன்றுமிராதவிடத்தில் உதாத்தம் எப்படியெனில்:- 'வ்யத்யயோ பஹுலம்'

ஸுப்திங்குபக்ரஹலிங்கநராணாம்
காலஹலச்ஸ்வரகர்த்ருயங்காம் ச ।
வ்யத்யயமிச்சதி ஶாஸ்த்ரக்ருதேஷாம்
ஸோபி ச ஸித்யதி பாஹுலகேந ॥

என்று பாணிநி முதலிய சாஸ்த்ரகார மஹான்கள் அநுசாஸனம் செய்தபடி வ்யத்யயத்தால் உதாத்தமென்று கொள்வதில் ஒரு குற்றமும் சொல்ல வொண்ணுது. வ்யத்யய கல்பநமே குற்றமெனில் உபஸர்க்க கல்பநமும் குற்றமே. உபஸர்க்க கல்பநம் பெருங்குற்றம். ஸ்வரவ்யத்யய கல்பநம் லகுவான குற்றமென்பது விசேஷம். பதங்களுக்கு அங்கம் ஸ்வரம். அங்கியான பதமொன்றை நாமாகப் புதிதாகக் கல்பிப்பதைக்காட்டிலும் அங்கமான ஸ்வரத்தில் சாஸ்த்ர ஸம்மதமான வ்யத்யயம் கல்பிப்பது வெகு லகு.

யஜிதாஜகூவரெக. இங்கு யோ ஹீத்யாதி ந்யாயத்தால் ஆ என்ற உபஸர்க்கம் அனுதாத்தமாயிருப்பது ஸுஸ்பஷ்டம். இதுபோலவே யகூதிஃஆயவக என்றவிடத்திலும் வ என்பதை அனுதாத்தமாகக் கொண்டு ஒருபதம்போல் பாவித்து வேஷ்டனே சொல்லவேண்டும். அப்படியிருக்க பதகாரர் அதை உதாத்தமாகக் கொண்டு தனிப்பதமாகவே படித்திருக்கிருர். இதற்கொரு காரணம் அவச்யம் சொல்லவேண்டும். அது என்னவென்னில்; அவச்யமானல் உபஸர்க்க ப்ராப்த ஸ்வரத்தை விட்டு வ்யத்யயத்தால் வேறு ஸ்வரம் கொள்ளலாமென்று அவர் கருதியதேயாகும்.

ஸஶ்ரவணஶ்ருதிநொ நரொ ஸ்வாகுஹிஂ ஆயிநொ ஜயது

என்றவிடம் யோ ஹி யில்லாதது. ஆயினும் வாஜி என்றது ஆத்யுதாத்தமாயிருக்கின்றது. இதனால் இந்தவாக்யம் ஸ்வதந்த்ரமாயில்லாமல் மேல்வாக்யத்தோடன்வயித்து ஒரு மஹாவாக்யமாகின்றதென்பது ஸ்பஷ்டம். அதுபோல் இங்கும் எவனுடைய ஸ்தோமங்கள் என்னிடத்தில் வந்தனவோ அந்த இந்திரன்' என்று மஹாவாக்யம் செய்து கொள்ள வேணுமென்று ஜ்ஞாபிப்பதற்காக ஸ்வரம் மாறுபட்டதென்று கொள்ளவேண்டும்.

ஆக இப்படி உவ என்ற உவஸமூத்துக்குள்ள அநுதாத்தஸ்வரம் ஆயெ ஜநவிஶேஷத்தைக் கருதி வ்யத்யயத்தால் கஹாஃ என்பதற்கு வந்த உதாத்தஸ்வரத்தை ஜ்ஞாபித்து உபபந்நமாகக்கூடியதாகையால் அது இங்கு ஆ உபஸர்க்கம் உண்டென்பதற்கு ப்ரமாணமாகமாட்டாது.

5 பின் எது ப்ரமாணமெனில் அர்த்தபர்யாலோசநமே. ஆ என்ற உபஸர்க்கமில்லாமல் இவ்விடத்தில் அர்த்தம்

பொருந்தாது. இவ்வுபஸர்க்கத்திற்கு அர்த்தமேது. வேஷ்டனே சொல்வதிலுள்ள ரஸாநுபவபாரவச்யத்தாலன்றோ ஆஙுபஸர்க்கத்தைச் சேர்ப்பதென்பர். அது யுக்தமன்று. இந்த ரஸாநுபவத்தை பரிவ்ருதா பரிவ்ருதாஸ இத்யாதிகளிலும் செய்யலாமே, ஏன் செய்யாதுவிடுத்தது. உதக்நே திஷ்ட ப்ரத்யாதிஷ்ட என்றவிடத்தில் ப்ரதி என்று இரண்டு உபஸர்க்கமிருந்தும் வேஷ்டனமில்லை, ஸ்வரபேதமில்லை. இவ்விடங்களில் யோக்யதை இருந்தும் அப்படி வேஷ்டனமில்லாமையால் வேஷ்டனத்திற்கு அவ்வித ரஸாநுபவம் நியாமகம் அன்றென்பதை த்ருடமாகக்கொள்ளவும். 1

அர்த்தமில்லாமல் ஓரிடத்திலும் இந்த உபஸர்க்கமில்லை. தா உபஸிஷ்டாஸ உபாதாயாதி என்றவிடத்திலும் அதற்கு அர்த்தமுண்டு. மேல் என்ற அர்த்தத்தில் அது இங்கு வந்திருக்கின்றது. ஸ்நியோதே ஸதியஸ்யாதி இத்யாதி ஸ்தலங்களில் போல். உபதாயாதி உபதானம் பண்ணுகிறது, உபாதாயாதி மேலே உபதானம் பண்ணுகிறது. 2

த்ருஷதௌ வ ஹந்தி என்றால் அம்மியையும் குழவியையும் கொல்வது நாசம்செய்வது என்று பொருள்படும். ஸம்ஹந்தி என்றால் இரண்டையும் மற்றொன்றின்மேல் மோதுவது என்றதாகும். ஸம்ஹந்தி என்றால் ஒன்றின்மேல் ஒன்று என்றில்லாமல் இரண்டையும் சேர்க்கிறது என்றதாகும். இவ்வர்த்தங்கள் விவக்ஷிதங்களல்ல. ஆகையால் ஸமாஹந்தி என்றது. ஒன்றின்மேல் மற்றொன்றை வைத்து அரைப்பது என்று பொருள். 3

உபாவரோஹ என்னும்போது இறங்கு என்று அர்த்தமிருக்க தயேஹ்யாரோஹ என்றவிடத்தில் ஏறு என்ற அர்த்தம் ஆங் உபஸர்க்கத்தாலேயே கிடைக்கிறது. ஆததே

என்றபோது எடுக்கிறதென்ற அர்த்தம் இதனாலேயே. இப்படியே மஹிநாமயூயா தாயொம முள்ளவிடங்களில் இதன் அர்த்தம் மிகவும் விசேஷமானது இல்லாவிட்டால் போதல் பொருள். இருந்தால் வருதல். 4

உவஙீஙாவாமா:. இதற்கு ஆ இல்லாத பக்ஷத்தில் என்னிடத்தில் நெருங்கிப் போயின என்று அர்த்தம். ஆ இருக்கும் பக்ஷத்தில் என்னிடத்தில் நெருங்கி வந்தன என்று அர்த்தம். என்னிடத்தில் போயின என்பது யுக்தமன்றாகையால் என்னிடத்தில் வந்தன என்ற அர்த்தத்தையே கொள்ளவேணும். இதனால் ஆ உபஸர்க்கமுண்டென்பது நிச்சயிக்கப்படுகின்றது. 5

வெஷ்ராநரொ ந ஊதயா ஆயாதா வராவதஃ. இங்கு ஊதயா என்பதற்குப் பிறகு ஆ பதபாடத்தில் உண்டு. இதற்கு அர்த்தம் தவிர மற்றொரு ஹேதுவும் ஸ்வாதமாகவும் சொல்ல முடியாது. அர்த்தம் அபேக்ஷிதமன்றாகில் இங்கு இவ்வுபஸர்க்கத்தைப் படிக்கவேண்டிய அவச்யமே இல்லை.

ஙீஸ்யாஸு முதலிய த்ரிக்ரமஸ்தலங்களில் அர்த்தத்தை அனுஸரித்துதான் ஆ ஓதப்படுகின்றது 6

ஸாநொஜாஷாணாவயஜுஙீமாஸு

ஸநொஜாஷாணஉவயஜுஙீமாஸு

ஊதயாதிகளில் ஸ்பஷ்டமாகவே வருதல் என்ற அர்த்தத்தில் இவ்வுபஸர்க்கம் ப்ரயோகிக்கப்பட்டிருக்கிறது. அதையநுஸரித்து ப்ரகிருதத்திலும் அது உண்டென்று கொள்ளவேணும். 7

நாநயாநாவாமழ். மற்றவர்களிடத்தில் நான் போகவில்லை என்று அர்த்தமாதலால் இங்கு ஆ இல்லை. வத ஙீவாமா: நியமத்தைப் பரிக்ரஹித்தார்கள் என்று லக்ஷணையால் கிடைக்கும் அர்த்தம் இங்கு விவக்ஷிதமாகையால்

ஶூத்³ர இல்லை. வ்ரதோபாயஸ்தி தான் உபாயஸ்தி இல்லை. 8

நமேஸ்யந் உபாயஸ்தி நமஸ்காரம் பண்ணிக்கொண்டு அருகே வருகின்றார்கள் என்று அர்த்தம். 9

ஶூத்³ரஸ்யோபஸமர்பணாதே³வ மோக்ஷப்ராப்திருக்த: |
அபேக்ஷா உபேக்ஷா ந ஸம்ப்ராப்தம் விசக்ஷணகடாக்ஷணை: |

இத்யர்வாசீதி வைதி³கம் வச:
தஸ்மாத்³ வைஷ்ணவேநைவ ஸேவிதவ்ய: |
தேந ஶோகஹாநீய வைதி³க
ப்ராஜ்ஞோபாஸ்யம் ச ஸேவிதவ்ய: ||

வைதிக பதஸேவை முற்றிற்று.

---

ந யஸ்ய ஹி நிவேஶாஸு குணிதேஷ்டம் ஶிவாஸோ
ந யஸ்ய ஹி நிவேஶாஸு குணிதேஷ்டம் க்ஷிவாஸ: |
பாலவந்தோபி ஶ்ராத்³த⁴க்ருத்யோசிதம் ராஜாநோ
நிஜவந்தோபி ஶ்ராத்³த⁴க்ருத்யோசிதம் த்³விஜா: ||

---

TAMIL NADU ARCHIVES LIBRARY MADRAS
112997
O22:417 N,13
N46

ஸ்ரீ:

# விண்ணப்பம்.

---

1 இனி க்ரமமாக பல விமர்சங்கள் வெளிவரும்.

2 ஸம்ஸ்க்ருத பாஷையில் உள்ள விமர்சங்கள் உத்யான பத்ரிகையில் ப்ரசுரிக்கப்படுகின்றன.

3 உத்யானபத்ரிகையில் இதுவரையில் வெளியான விமர்சங்களாவது:

1 சாகுந்தலத்திலும் ஸ்ரீ யாதவாப்யுதயத்திலும் ப்ரயோகிக்கப்பட்ட '[illegible]' என்ற பதத்தின் அர்த்தத்தைப் பற்றிய நான்கு லேகங்கள்.

2 '....[illegible]' என்ற ஸ்ரீபாஷ்ய ஸ்ரீஸூக்தியைப்பற்றியது ஒன்று.

3 '[illegible]' '[illegible]' என்ற ஸ்ரீ தேசிகஸ்ரீஸூக்திகளைப் பற்றியதொன்று.

(2, 3 இரண்டும் 19வது புஸ்தகம் 3வது ஸஞ்சிகையில் ப்ரசுரமானவை)

4 '[illegible]' என்று ரகுவம்சவ்யாக்யானத்திலுள்ள மல்லிநாதன் உக்தியைப்பற்றியது. இதில் முதல் லேகம் 19. 2 லும் இரண்டாவது 19. 4 லும் ப்ரசுரமாகியிருக்கின்றது.

---

T. E. 25 C. 500 5-6-46 Srinivasa Press, Tiruvadi.